Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
SATURDAY, SEPTEMBER 19, 2022

சனிக்கிழமை பெப்ரவரி 19, 2022 | ஒளி: 07 கதிர்: 236 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

### எமது உறவுகளுக்கு நடந்தது என்ன?

# அவர்களைக் கொன்று விட்டீர்களா?

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

உயிருடன் இல்லாதவர்களைக் கேட்டால் எப்படி தருவதென நீதியமைச்சர் கேட்கின்றார் எனில், கையளிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நடந்தது என்னவென, வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க உபசெயலாளர் ரத்தீஸ்வரன் கவிதா கேட்டுள்ளார். எமது உறவுகளுக்கு நடந்தது என்ன? அவர்களை கொலை செய்துவிட்டீர்களா எனவும் வினவினார்.

கிளிநொச்சியில் நாளை (20) இடம்பெறவிருக்கும் போராட்டம் தொடர்பில், நேற்று (18) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, மேற்கண்டவாறு கேள்விகளை எழுப்பினார்.

இந்த ஊடகச் சந்திப்பு, கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது குடும்பங்களின் சங்க தலைவி கதிர்காமநாதன் கோகிவாணி தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக எதிர்வரும் 20ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள பேரணி, டிப்போ சந்தியில் நிறைவடையுமெனத் தெரிவித்த அவர், அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

எமது உறவுகளைத் தேடி, 11 ஆண்டுகளுக்கு மேலாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இந்நிலையில், நீதி அமைச்சர் தெரிவித்த கருத்தானது, கலங்க




வைத்துள்ளது. எமது உறவுகளுக்கு நடந்தது என்னவென்பது தொடர்பில், சர்வதேசம் நீதியை பெற்றுத்தர வேண்டுமென வலியுறுத்தியே இப்போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்களை சரணடையுமாறும், விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்வதாகவும் இராணுவத்தினர் அறிவிப்பொன்றை விடுத்தனர். இந்நிலையில்தான், எனது கணவர் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்.

தொடர்ச்சி P2



## யாழில் அங்குராப்பணம்...

■ எம். றொசாந்த்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட வெளியீட்டு பணியகத்தின் அங்குராப்பண நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில், ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகபெருமவின் தலைமையில் நேற்று (18) நடைபெற்றது. அங்குராப்பண நிகழ்வைத் தொடர்ந்து யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களுடன் சிநேகபூர்வ சந்திப்பும் இடம்பெற்றது. இந்நிகழ்வுகளில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

## மைத்திரிபால யாழுக்கு விஜயம்



முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு நாளை (20) விஜயமொன்ற மேற்கொள்ளவுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு, யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள நிலையில், அதில் கலந்துகொள்வதற்கே யாழ். செல்கின்றார். அந்த மாநாடு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நெல்லியடியிலும் கையெழுத்து வேட்டை

■ நிதர்ஷன் வினோத்

பயங்கரவாத தடைச் சட்டத்தை தடை செய்யக்கோரிய கையெழுத்துப் பெறும் நடவடிக்கை, யாழ்ப்பாணம், நெல்லியடி பகுதியில் நேற்று (18) நடைபெற்றது.

வடமராட்சி, நெல்லியடி பஸ் நிலையத்தில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன்



தலைமையில் இந்தக் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் நடைபெற்றன.

தொடர்ச்சி P2

## பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஷவேந்திர சில்வாவை சந்தித்தார்

இலங்கைக்கான பாகிஸ்தானின் புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் (ஓய்வு) உமர் பாரூக் புர்கி, ஹிலால்-ஐ-இம்தியாஸ், பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவை இராணுவத் தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை (18) பிற்பகல் உத்தியோகபூர்வமாக சந்தித்தார்.

இருவருக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, இலங்கைக்கான



பாகிஸ்தானின் புதிய உயர்ஸ்தானிகர் இரு நாடுகளுக்கும் இடையில் பல வருடங்களாக நிலவும் நட்புறவுகள் மற்றும்

தொடர்ச்சி P2

## கூரையின் மீதேறி தனிநபர் ஆர்ப்பாட்டம்





■ எஸ் சதீஸ்

நோர்வூட் வெஞ்சர் கீழ் பிரிவு தோட்டப் பகுதியில் சிறிய வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர், கூரையின் மீதேறி, நேற்று (18) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். நோர்வூட் பிரதேச சபைக்கு எதிராகவே அவர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

## எரிபொருட்களின் மீதான வரியைக் குறைக்கவும்

### பசிலுக்கு கம்பன்பில கடிதம்



எரிபொருட்களின் மீதான வரியை உடனடியாகக் குறைக்குமாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அதனூடாக, ஒவ்வொரு நாளும் நட்டத்தில் இயங்கும் எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் நட்டத்தை ஈடுசெய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர், தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கு, நாளொன்றுக்கு 551 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுகின்றது.

தொடர்ச்சி P2

### இணையச் சேவையின் ஊடாக

## ரயில் பயணச்சீட்டு

இணையச் சேவையின் ஊடாக (ஒன்லைன்) ரயில் பயணச்சீட்டுகளை பெற்றுக்கொள்ளும் நடைமுறை நேற்று (18) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

"இதற்கென அலைபேசி செயலியொன்று (Mobile App) தயாரிக்கப்பட்டுள்ளது" என ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

கடனட்டையை பயன்படுத்தி ரயில் பயணச்சீட்டினை ஒன்லைன் ஊடாக பெற்றுக்கொள்ள பயணிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர், இந்தச் செயலியை மேம்படுத்தியதன் பின்னர், ரயில் அனுமதிச் சீட்டை வீட்டிலிருந்தே பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

"எதிர்வரும் சில

தொடர்ச்சி P2

## இரண்டு கட்டங்களாக மின்வெட்டு

### செவ்வாய் அறிவிப்பு; வெள்ளி திரும்பியது

இரண்டு கட்டங்களாக நாடளாவிய ரீதியில் மின்வெட்டை அமல்படுத்த பொது பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு நேற்று (18) அனுமதி வழங்கியுள்ளது. இந்த மின்வெட்டு நேற்று (18) முதல் அமல்படுத்தப்பட்டது.



அதற்கமைய, பிற்பகல் 2.30 முதல் மாலை 6.30 வரையான காலப்பகுதியில் ஒரு மணித்தியாலத்துக்கும் மாலை 6.30 தொடக்கம் இரவு 10.30 வரையான காலப்பகுதியில் 45 நிமிடங்களுக்கும் மின்வெட்டு அமல்படுத்தப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியில், ஏ.பீ.சி மற்றும் டீ என்ற அடிப்படையில்,

தொடர்ச்சி P2

### 21/4 தாக்குதல்கள் வழக்கு

## சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் பூஜித், ஹேமசிறி முற்றாக விடுவிப்பு

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகிய இருவரும் முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விசேட மேல் நீதிமன்ற நீதிபதிகளான நாமல் பலல்லே, ஆதித்திய பட்டபெத்திகே,



மொஹமட் இஷடீன் உள்ளிட்ட மூவரடங்கிய குழாமின் உத்தரவின் பிரகாரம் இவ்விருவரும் நேற்று (18) விடுவிக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்தார் ஷானி

தன்னைக் கைது செய்தல் மற்றும் தடுப்புக்காவலில் வைத்தல் ஆகியவற்றை இடைநிறுத்தும் வகையில் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உயர் நீதிமன்றத்தில் நேற்று (18) அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல்



செய்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை வழிநடத்திய மொஹமட் ஹாசிம் மொஹமட் சஹரான் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ், குளியாப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் பீ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தங்க தாதுகோபுரம் திருட்டு; தகவலுக்கு சன்மானம்

ரம்புக்கணை, தெலிவல கொட்டவெஹர ரஜமஹா விஹாரையில் வைக்கப்பட்டிருந்த தங்கத்திலான சிறிய வகை தாதுகோபுரம் (கரண்டுவ) திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் தகவல்களை வழங்கும் நபருக்கு ரூ. 25 இலட்சம் சன்மானம் வழங்கப்படுமென, பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த தொல்பொருள் பெறுமதியான 'கரண்டு' என அழைக்கப்படும் பொருள், காணாமல் போன சம்பவம் தொடர்பில் சீஐடியினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதற்கமைய, இது தொடர்பில் ஏதேனும்



தகவல் அறிந்தால், அல்லது சந்தேகநபர்கள் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அஞ்சலோ பெர்னாண்டோ 071 8591772, பிரதான பொலிஸ் பரிசோதகர் சிதத்த ஜயசேகர - 071 8591924, குற்றப் புலனாய்வு திணைக்கள செயற்பாட்டு அறை - 011 2422176.

PAGE 1 தொடர்ச்சிகள்

# நெல்லியடியிலும் கையெழுத்து வேட்டை

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இளைஞர் யுவதிகள் விசாரணை இன்றி கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டு இருப்பதுடன் மிகவும் மோசமான சட்ட ஏற்பாடுகளை கொண்ட பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டுமென தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தொடர்ச்சியான கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அதிலோர் அங்கமாகவே நெல்லியடியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# அவர்களைக் கொன்று விட்டீர்களா?

மூன்று பஸ்களில் இராணுவத்தினர் பலரை எனது கண் முன்பாக ஏற்றிச் சென்றனர்.

இந்த நிலையில்தான், எமது உறவுகள் உயிருடன் இல்லையென நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அப்படியாயின் எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்களைக் கொலை செய்துவிட்டீர்களா? இலங்கை அரசாங்கத்திடம் எமக்கு நம்பிக்கை இல்லை. அதனால்தான் நாங்கள் சர்வதேசத்திடம் நீதியை கோரி நிற்கின்றோம். சர்வதேசத்துக்கு வலியுறுத்தும் வகையிலேயே 20ஆம் திகதியன்று போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றார்.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஷவேந்திர சில்வாவை சந்தித்தார்

தற்போதைய பரிமாற்ற நிகழ்ச்சிகள் குறிப்பாக இரு நாடுகளின் பயிற்சி பரிமாற்ற தொகுதிகளில் ஆயுதப்படைகளின் பங்கேற்புடனான நிகழ்ச்சிகளினையும் நினைவுகூர்ந்தார்.

ஜெனரல் ஷவேந்திர சில்வா, புதிய உயர்ஸ்தானிகரின் நியமனத்திற்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன் அவருக்கு சிறந்த ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்தார். பின்னர் இருவருக்குமிடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

பாகிஸ்தானின் உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேனல் முஹம்மது சப்தாரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

# இரண்டு கட்டங்களாக மின்வெட்டு

நான்கு வலயங்களின் கீழ் மின்வெட்டு அமல்படுத்தப்படும் என பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

“எரிபொருள் இன்மையால் 400 மெஹாவோட் மின்னுற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய மின்பிறப்பாக்கிகள் செயற்படவில்லை” என பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில், இலங்கை மின்சார சபை ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியிருந்ததாக தெரிவித்த ரத்நாயக்க, இதனால் எதிர்பாராத விதமாக மின்வெட்டை அமல்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்றார்.

மேலும் சில மின்னுற்பத்தி நிலையங்களில் இன்றிரவுடன் (நேற்று) எரிபொருள் தீர்ந்துவிடுமென பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அதற்கமைய, சுமார் 600 மெஹாவோட் மின்சாரம் தேசிய கட்டமைப்பில் இழக்கப்படும் என்பதால், மின்வெட்டை அமல்படுத்துவதற்கான அவசியம் ஏற்பட்டதாக அவர் கூறினார்.

எதிர்வரும் ஏப்ரல் இறுதிவரையிலும் மின்வெட்டு அமல்படுத்தப்படமாட்டாது என செவ்வாய்க்கிழமை (15), பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்திருந்த நிலையில், மூன்று நாள்களுக்குப் பின்னர் நேற்று (18), மின்வெட்டு அமல்படுத்துவது தொடர்பிலான அறிவிப்பை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரயில் பயணச்சீட்டு

“எதிர்வரும் சில தினங்களில் அனைத்து ரயில் சேவைகளுக்குமான பயணச்சீட்டுகளை ஒன்லைன் ஊடாக பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கமாகும்” என மேலும் தெரிவித்தார்.

“ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்காக மாத்திரமே இந்தச் சந்தர்ப்பத்தைத் தற்போது வழங்கியுள்ளதாகவும் புதிய கட்டமைப்பொன்றை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தியதன் பின்னர், பயண அட்டை மூலமாக செயற்படுத்தக் கூடிய வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும்” என்றும் அவர் கூறினார்.

# அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்தார் ஷானி

அந்த ‘பீ’ அறிக்கைக்கு அமைய, தம்மை கைது செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதற்கும் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியால் தமக்கு தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கும் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டத்தரணி மஞ்சுள பாலசூரியவால் இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அநாமதேய மனு ஒன்றின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட போலியான விசாரணை அறிக்கைக்கு அமைய தனக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள B அறிக்கையையும் வலுவிழக்கச் செய்யுமாறும் அடிப்படை உரிமை மனுவினூடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏதேனுமொரு விதத்தில் தாம் கைது செய்யப்பட்டால், உடனடியாக விடுதலை செய்வதற்குரிய உத்தரவை பிறப்பிக்குமாறும், அவ்வாறு இடம்பெற்றால் 100 மில்லியன் நட்டஈட்டை செலுத்துவதற்கு உத்தரவிடுமாறும் ஷானி அபேசேகர தனது மனுவினூடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மெரில் ரஞ்சன் லமாஹேவா, திணைக்களத்தின் பெண் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிரோஷனி பத்திரன உள்ளிட்ட 14 பேர் மனுவின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தம்மை கைது செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இதனூடாக தமது அடிப்படை உரிமை மீறப்படும் எனவும் ஷானி அபேசேகர தனது மனுவின் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளார்.

# கூரையின் மீதேறி தனிநபர் ஆர்ப்பாட்டம்

அவரது வர்த்தக நிலையம் அமைக்கப்பட்டிருக்கும் காணி, பாடசாலைக்குச் சொந்தமானது எனத் தெரிவித்து, அந்த வர்த்தக நிலையத்தை அகற்றுவதற்காக, அதிகாரிகள் நேற்றுக்காலை சென்றிருந்தனர். அதன்போது, அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. இதனையடுத்தே, வர்த்தக நிலையத்தை அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பழைமை வாய்ந்த பாடசாலை கட்டடமொன்று புனரமைக்கப்பட்டு யோகட் நிறுவனமொன்று அமைக்கப்பட்டது. ஜனாதிபதியின் சௌபாக்கிய வேலைத்திட்டத்தின் கீழே, புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அந்தக் காணியில் சட்டவிரோதமான முறையில், வர்த்தக நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அக்காணித்துண்டை, யோகட் நிறுவனத்துக்கு வழங்குமாறு அம்பகமுவ பிரதேச செயலகத்தால் அறிவுறுத்தப்பட்டது.

எனினும், அக்காணித்துண்டை வழங்க மறுத்த வர்த்தகர், 1992 ஆம் ஆண்டு முதல், இவ்விடத்தில் வர்த்தகம் செய்து வருவதாகவும், அதில் வரும் சொற்ப வருமானத்தைக் கொண்டே குடும்பம் நடத்திவருவதாகவும் தெரிவித்தார். இந்தக் கட்டடமானது வெஞ்சர் தோட்ட பாடசாலையாக இயங்கி வந்துள்ளது. அதனை, ஹட்டன் வலையக் கல்வி பணிமனையிடம் இருந்து நுவரெலியா மாவட்ட செயலாளர் உத்தியோக பூர்வமாக பெற்று, வெஞ்சர் யோகட் நிறுவனத்தை நடத்த வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் பூஜித், ஹேமசிறி முற்றாக விடுவிப்பு

பிரதிவாதி தரப்பு சாட்சியம் அழைக்கப்படாது, நீதிபதிகள் குழாமின் ஏகமனதான தீர்மானத்துக்கு அமையவே இவ்விருவரும் வழக்கில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக தலா 855 குற்றச்சாட்டுகளின் கீழ், மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருட்களின் மீதான வரியை குறைக்கவும்

வரி அறவீடுகளின் ஊடாக 92 ஒக்டென் பெற்றோல் லீற்றருக்கு 42 ரூபாயும், 95 ஒக்டேன் பெற்றோல் லீற்றருக்கு 64 ரூபாயும், டீசல் லீற்றருக்கு 17 ரூபாயும், ஒரு லீற்றர் சுப்பர் டீசலுக்கு 39 ரூபாயும் வரியாக, நிதியமைச்சு விடுத்துள்ளது. இந்த வரி அறவீடுகளின் ஊடாக, எரிபொருட்களில் இருந்து நிதியமைச்சுக்கு நாளொன்றுக்கு 367 மில்லியன் ரூபாய் கிடைக்கிறது. இந்த வரி அறவீட்டை நிதியமைச்சு நீக்கித் தருமாயின், எரிபொருள் கூட்டுத்தாபனதுக்கு ஏற்படும் நட்டத்தை பாரியளவில் குறைத்துக்கொள்ளமுடியும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# யாழில் கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஸை யாழில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யுத்தத்தின் காரணமாக நீண்டகாலமாக செயலிழந்திருந்த உள்ளூராட்சி மக்கள் பிரதிநிதிகள் கட்டமைப்பு மற்றும் வினைத்திறனான உள்ளூராட்சி சேவைகளை மக்களுக்கு வழங்குவதில் காணப்படும் சவால்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

# பூஸ்டர் தடுப்பூசியை செலுத்திக் கொள்வதில் பொதுமக்கள் அதிக ஆர்வம்

எம்.எம். அஹமட் அனாம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொவிட்-19 தடுப்பூசி அட்டை, பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் பல இடங்களிலும் பரீட்சிக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் பூஸ்டர் தடுப்பூசியை செலுத்திக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த வகையில், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிலுள்ள பொதுமக்களுக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் மீராவோடை அல்ஹிதாயா வித்தியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.



ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் இதுவரையில் 39,510 சினோபாம் தடுப்பூசியும், 160 அஸ்டாசெனிக்கா தடுப்பூசியும், 11,286 பைசர் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம். தாரிக் தெரிவித்துள்ளார்.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம். தாரிக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நாட்டில் ஒமிக்ரோன் வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில் மக்கள் கொவிட் 19 சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுவது தற்காலிக பாதுகாப்பாக இருந்தாலும், தடுப்பூசி செலுத்திக் கொள்வதே உயிரிழப்புகளிலிருந்து பாதுகாப்பு ஏற்படுத்தும் என சுகாதாரத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

பொதுமக்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டுமென்பதுடன், பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# டெங்கை அடக்குவோம்



வ. சக்திவேல்
shagthivel@gmail.com









மனிதன் ஆரோக்கியமாக வாழவேண்டுமெனில், மனிதனின் செயற்பாடுகளும் இன்றியமையாததாகிவிட வேண்டும். இவற்றை விடுத்து, தாமும் தமது செயற்பாடுகளுமாக ஏனோ, தானோவென்று தமது நாளாந்தக் கடமைகளை மேற்கொள்ளும் பட்சத்தில், ஆரோக்கியமான வாழ்வு என்பது எட்டாக்கனியாகவே அமைந்து விடும்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில், டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. மாவட்டத்தில் ஆங்காங்கே காணப்படும் சிறு நீர்த் தேக்கங்கள், குளங்கள், குட்டைகளாலும் இவ்வாறு நுளம்புப் பெருக்கம் அதிகதித்துள்ளது. அத்துடன், மனித நடவடிக்கைகள் மூலம், வெற்றுப் போத்தல்கள், கலன்கள், சிரட்டைகள், பொலித்தீன் பைகள் போன்ற கழிவுகளை, பொறுப்பற்றவிதத்தில் பொது இடங்களிலும் வெற்று வளவுகளிலும் வீசுவதால் அவைகளில் நீர் தேங்கி நின்று, டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளுக்கு ஏற்ற வாழிடங்களாக அமைந்துவிடுகின்றன.

மட்டக்களப்பு மக்கள் சற்று விழிப்புடன் செயற்பட்டு, வீடுகளில் தேங்கிக் கிடக்கின்ற குப்பைகள், நீர்தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி, டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம்கொடுக்காத வகையில், துப்புரவாக வைத்து கொள்ளுமாறு சுகாதாரத்துறையினர் அடிக்கடி வேண்டுகோள்விடுத்து வருகின்றனர்.

இவ்வாறு டெங்குத் தாக்கத்துக்கு உட்படுவோர் தொடர்ந்து வாராவாரம் அதிகரித்துச் சென்றால், மாவட்டத்தின் நிலைமை மேலும் மோசமடைந்து செல்லும். தனிமனிதன், தான்மாத்திரம் சுகதேகியாக இருந்தால் போதாது; அயலிலுள்ளவர்களும் தேகஆரோக்கியத்துடன் வாழவேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட வேண்டும். இத்தகைய எண்ணமும் சிந்தனைகளும் செயற்பாடுகளும் அனைவரின் மனதிலும் எழவேண்டும். அப்போதுதான் சிறந்ததோர் ஆரோக்கியமான சமூகமும் சூழலும் கட்டியெழுப்பப்படும்.

## டெங்கு என்றால் என்ன?

ஈடிஸ் எஜிப்டிஸ், ஈடிஸ் எல்போவிக்டஸ் என்னும் நுளம்பு வகைகளால், பரவக்கூடிய வைரஸ் கிருமியால் டெங்கு காய்ச்சல் ஏற்படுகிறது. இந்த வகை நுளம்புகள், ஏனைய நுளம்பு வகைகளைப் போலல்லாமல், காலை, மாலை, வேளைகளில்தான் கடிக்கின்றன.

டெங்கு நோய் ஏற்பட்டுள்ள ஒருவருக்கு தலைவலி, காய்ச்சல், தோலில் தடிப்புகள், உடம்பு வலி காணப்படும். நுளம்புக் கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஏதும் அறிகுறிகள் தெரிந்தால், மருத்துவரிடம் உடன் செல்ல வேண்டும். எனவே, இவ்வாறான நிலைமை ஏற்படாதிருக்க, ஒவ்வொரு தனிமனிதனும் தான் சார்ந்த சூழலை சுத்தமாக வைத்திருந்து, பிறரையும் அதுபோல் வழிநடத்தினால்தான் எமது உயிர்களை வீணாகப் பலிக்கடாவாக்குவதற்கு இட்டுச் செல்லாமல் பாதுகாக்கலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் டெங்குநோய் பரவலில் இருந்தும் மக்களைப் பாதுகாக்க, சுகாதாரத் தரப்பு பெரும்பிரயத்தனம் எடுத்து வருகின்றது.

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில், அவ்வப்போது மழை காரணமாக தேக்கமடையும் நீரில், டெங்கு நுளம்புகள் பெருகுவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கூட்டங்களும் இடம்பெற்று வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இதன்போது, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதுடன், டெங்கு நோய் பரவலையும் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும், கொரோனா வைரஸைவிட, 30 மடங்கு மரணத்தை ஏற்படுத்தும் டெங்கு நோயை பரவாமல் கட்டுப்படுத்தி, மக்களைப் பாதுகாப்பது தொடர்பாகவும் சுகாதாரத்துறையினர், ஏனைய அரச, அரசசார்பற்ற அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இதனடிப்படையில் மக்களை விழிப்புணர்வூட்டி, டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் வகையில் உள்ள இடங்களை இனங்கண்டு அகற்றுதல், நுளம்புக்கடி ஏற்படாத வண்ணம் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொள்ளல், உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச செயலகங்கள், பொதுச் சுகாதார பிரிவினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவிகளையும் இணைத்துக் கொண்டு, விழிப்புணர்வுகளையும் விசேட வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும், கொரோனா வைரஸ் பரவல், டெங்கு நோய் பரவல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்களினது ஒத்துழைப்பே அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டில், அதிகளவு டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அந்தவகையில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 426 நோயாளர்களும் செங்கலடி சு.வை.அ பிரிவில் 129 நோயாளர்களும் களுவாஞ்சிகுடி சு.வை.அ.பிரிவில் 58 நோயாளர்களும் வாழைச்சேனை சு.வை.அ.பிரிவில் 613 நோயாளர்களும் காத்தான்குடி சு.வை.அ. பிரிவில் 417 நோயாளர்களும் ஏறாவூர் சு.வை.அ.பிரிவில் 203 நோயாளர்களும் பட்டிப்பளை சு.வை.அ.பிரிவில் 13 நோயாளர்களும், வவுணதீவு சு.வை.அ.பிரிவில் 30 நோயாளர்களும் வாகரை சு.வை.அ.பிரிவில் 20 நோயாளர்களும் வெல்லாவெளி சு.வை.அ.பிரிவில் 25 நோயாளர்களும் ஓட்டமாவடி சு.வை.அ.பிரிவில் 286 நோயாளர்களும் ஆரையம்பதி சு.வை.அ.பிரிவில் 83 நோயாளர்களும் கிரான் சு.வை.அ.பிரிவில் 193 நோயாளர்களும் கோறளைப்பற்று மத்தி சு.வை.அ.பிரிவில் 327 டெங்கு நோயாளர்களுமாக மொத்தம் 2,823நோயாளர்களும் நான்கு மரணங்களும் பதிவாகியுள்ளன.

2022இல் இதுவரையான காலப்பகுதியில் மாவட்டத்தின் 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் 73 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். டெங்கு மரணங்கள் எதுவும் சம்பவிக்கவில்லை.

## டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத்திட்டம்

பொதுமக்கள் சுகாதார நடவடிக்கைகளை முழுமையாகப் பின்பற்றுவதற்கும், விசேட விழிப்புணர்வு செயற்றிட்டங்களை மாவட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை, மட்டக்களப்பு மாவட்ட செயலகம், உள்ளூராட்சி மன்றங்கள், படையினருடன் இணைந்து மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

அதற்கமைவாக பொது இடங்கள், அரச நிறுவனங்கள் போன்ற இடங்களில் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வாராந்த சிரமதான நடவடிக்கைகள் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்றன.

கொரோனா வைரஸுக்கு மத்தியில், டெங்கு நோயின் தாக்கத்தையும் கட்டுப்படுத்துவதற்கு பாடுபடும் சுகாதாரத்துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது, ஒவ்வொரு குடிமகனினதும் தலையாக கடமையாகும். எனவே, பொறுப்பற்றவிதத்தில் கழிவுப் பொருட்களை வீசாமல், நீர்தேங்கி நுளம்பு பெருகும் இடங்களை இல்லாதொழித்து, டெங்கற்ற வாழ்வை மேம்படுத்த அனைவரும் உறுதிபூண வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



# தேசிய சம்பள கொள்கையும் தொழிற்சங்கங்களின் எதிர்பார்ப்பும்



டொக்டர் வாசன் இரத்தினசிங்கம்
மத்திய குழு மற்றும் ஊடககுழு உறுப்பினர்,
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

அரசு ஊழியர்களின் வேதனமானது, அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோஷம் மக்களிடையே எழுந்திருக்கின்றது. அத்துடன் வாழ்க்கைச் செலவின் சடுதியான அதிகரிப்பால் தொழிற்சங்கங்கள் யாவும், இந்தச் சம்பள அதிகரிப்பில் பாரிய கவனத்தைச் செலுத்தி வருகின்றன.



டொக்டர் செனால் பெர்னாண்டோ
செயலாளர்,
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

2006ஆம் ஆண்டுக்கு முன்னர் உள்ள காலப்பகுதியில் இந்த வேதன அதிகரிப்பானது குறித்த அமைச்சருடன் கலந்துரையாடி, அவர் சம்பள விடயங்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கும் போது, அவை அமைச்சரவையின் அனுமதியுடன் வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையின் காரணமாக, அரச ஊழியர்களும் தொழிற்சங்கங்களும் துறைசார்ந்த அமைச்சருக்குப் பின்னால் செல்ல வேண்டியது மட்டுமன்றி, ஒரு சாராருக்குச் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் பொழுது, இன்னொரு சாரார் தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்ல வேண்டிய காலம் இருந்து வந்திருக்கின்றது.

இதன் நிமித்தம், 2003ஆம் ஆண்டு, வருடத்தில் உள்ள 365 நாள்களில் 187 நாள்கள் தொழிற்சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்புக்கு சென்றிருந்தன. இதன் காரணமாக அரச சேவையானது முழுமையாக ஸ்தம்பிதம் அடையும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது.

இந்தத் துரதிர்ஷ்ட நிலையை உணர்ந்த அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம், தேசிய சம்பளக் கொள்கையைத் தயாரித்து, அதனை அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எழுத்து மூலமாகத் தேசிய சம்பளக் கொள்கையை உருவாக்குமாறு கோரியிருந்தது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா, தேசிய சம்பளக் கொள்கையை உருவாக்கும் பொருட்டு, தேசிய சம்பள ஆளணி ஆணைக்குழுவை உருவாக்கியிருந்தார். இந்தத் தேசிய சம்பள ஆளணி ஆணைக்குழுவினர், மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பரிந்துரைகளைக் கவனத்தில் கொண்டு தேசிய சம்பளக் கொள்கையை உருவாக்கினர்.

இத்தேசிய சம்பளக் கொள்கையின் பிரகாரம், அரச துறையிலேயே இருக்கின்ற அரச சேவைகள், அரசு ஊழியர்களின் வகைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கான சம்பளப் படிமுறை தயாரிக்கப்படுகின்றது. இந்தத் தேசிய சம்பளம் கொள்கையின் பிரகாரம், சம்பளத் திரட்டு விகிதம் உருவாக்கப்பட்டு இதன் பிரகாரம் 1க்கு 4.25வீதத்திற்கு உட்பட்ட வகையில் அரச ஊழியர்களின் வகைக்கு ஏற்ப அவர்களின் அடிப்படை சம்பளம் கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

இதிலே, ஓர் அமைச்சில் பணிபுரிகின்ற கனிஷ்ட ஊழியரின் சம்பளத்தின் 4.25 மடங்கு சம்பளத்தை அந்த அமைச்சில் உயர் அதிகாரியாகப் பணிபுரிகின்ற அமைச்சின் செயலாளர் பெறுவார். மற்றைய வகைகளைச் சேர்ந்த ஊழியர்கள் இந்த விகிதத்துக்கு உட்பட்ட வகையில் அடிப்படைச் சம்பளமானது கணிக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் தேசிய சம்பளக் கொள்கையின் மூலம், ஒருவரது அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படும் பொழுது, சம்பளத் திரட்டு விகிதமானது 1க்கு 4.25 என்ற வீதத்தில் பேணப்பட வேண்டியது அவசியமாகும். இல்லாவிடின், அது தேசிய சம்பளக் கொள்கையைப் பாதிக்கும். 2006/06 சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளப் பிரச்சினை தீர்க்கப்பட்டதுடன், நாட்டில் தொழிற்சங்கங்கள் சம்பளப் பிரச்சினையை கோசமாகக் கொண்டு தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்வது வெகுவாக குறைவடைந்தது.

ஆனால், இதன் பிரகாரம் ஓர் அமைச்சில் இருக்கின்ற தொழிற்சங்கங்கள், சம்பள அதிகரிப்பு பரிந்துரைகளை முன்வைக்கும் பொழுது, துறை சார்ந்த அமைச்சர் இந்தச் சம்பள விடயங்கள் சம்பந்தமாக அவற்றின் பரிந்துரைகளை உள்ளடக்கி, தேசிய சம்பள ஆளணி ஆணைக்குழுவுக்கு இந்தப் பரிந்துரைகள் யாவும் அனுப்பி வைக்கப்படும்.

தேசிய சம்பள ஆளணி ஆணைக் குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பிற்பாடு, இந்தப் பரிந்துரைகள் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பி, இந்தச் சம்பள அதிகரிப்பானது ஒருவகையினருக்கு அதிகரிக்கப்படும் போது, அரசுத்துறையில் இருக்கின்ற மற்றைய ஊழியர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் குறித்த அந்த அரச ஊழியர்களின் வகை மேலே மற்றும் கீழே சமாந்தரமாக உள்ள அரசு ஊழியர்களின் பாதிக்காத வகையில் வழங்க, பகுப்பாய்வு செய்த பின்னர், அந்தச் சம்பளத்தை வழங்கும் இயலுமை நிதி அமைச்சருக்கு இருக்கின்றதா என்பதை ஆராய்வதற்கு, நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பிற்பாடு, இதற்குரிய அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டு, அந்தச் சம்பள அதிகரிப்பானது வழங்கப்படுகிறது. இந்தச் செயற்பாடானது ஒரு நியாயமான செயற்பாடாகவே இடம்பெற்று வருகின்றது.

> **தேசிய சம்பளக் கொள்கையைச் சரியான விதத்தில் பாதுகாத்து, அவற்றின் ஊடாக இந்தச் சம்பள பிரச்சினையைத் தீர்க்கும் பொழுதுதான், அரச ஊழியர்களுக்கு இடையே இருக்கின்ற பிரச்சினை, அதேபோன்று சம்பளக் கோரிக்கையை முன்வைத்து தொழிற்சங்கங்கள் பணிப்பகிஸ்கரிப்புக்கு செல்லும் நிலையையும் தடுக்க முடியும் என்பதையும் உறுதியாகக் கூறிக்கொள்ளவதோடு அதற்காக தொடர்ந்து போராடுவோம்**

2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம், சகல அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை 10,000 ரூபாவால் அதிகரிப்பதாக அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதி அளித்திருந்ததன்படி, அவற்றை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்திருந்தது. இதன்போது மற்றைய தொழிற்சங்கங்கள் யாவும் இந்தச் சம்பள அதிகரிப்பை வரவேற்றதுடன், இந்தச் சம்பள அதிகரிப்பானது சகல வகையினருக்கும் ஒரே விதத்தில் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பைக் கொண்டு கருத்துகளை வெளியிட்டு இருந்தன.

ஆனால், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், இந்தச் அதிகரிப்பானது தேசிய சம்பளக் கொள்கையைப் பாதிக்காத வகையில் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இருந்தது. அத்தோடு, இந்தச் சம்பள அதிகரிப்பு சமமாகச் சகல ஊழியர்களுக்கும் 10,000 ரூபாவால் அதிகரிக்கப்படும் பொழுது, இது தேசிய சம்பள திரட்டு விகிதத்தினை 1க்கு 2.25 ஆகக் குறைத்துவிடும். அதோடு தேசிய சம்பளக் கொள்கை பாதிக்கப்படும் என்ற காரணத்தையும் வெளியிட்டிருந்தது.

இந்த ஆபத்தான நிலையை அப்போதைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க விளங்கிக் கொள்ளாத பொழுதும், அப்பொழுது பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சராக இருந்த ரஞ்சித் மத்தும பண்டார விளங்கிக் கொண்டார். இதன் காரணமாக, 2015ஆம் ஆண்டு அரச ஊழியர்கள் பெற்ற அடிப்படைச் சம்பளமானது 2020ஆம் ஆண்டு வரையில் இரண்டு மடங்காக அதிகரித்தது.

இந்தத் தேசிய சம்பளக் கொள்கை பாதுகாக்கப்பட்டதன் விளைவாக வைத்தியர்கள் மாத்திரம் இன்றி நாட்டிலேயே இருக்கின்ற சகல ஊழியர்களுக்குமான அடிப்படை வேதனமானது இரண்டு மடங்காக அதிகரிக்கப்படக் கூடியதாக இருந்திருக்கின்றது.

ஆனால், துரதிர்ஷ்டவசமாகத் தேசிய கொள்கையைப் பாதுகாப்பதற்கும் தேசிய கொள்கை காரணமாகவே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என்ற கோசத்துடன் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், தேசிய கொள்கையை மீறும் விதத்தில் செயற்படுகின்றமை அரச சேவையில் உள்ள பல்வேறுபட்ட வகையினரைக் கவலையில் ஆழ்த்தி இருக்கிறது.

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை மட்டுமன்றி, தாதியர் சம்பள பிரச்சினை, சகல அரசு ஊழியர்களின் சம்பள பிரச்சினை யாவும் தீர்க்கப்பட வேண்டும். ஆனால், இவை யாவும் மேற்குறிப்பிடப்பட்ட நீதியான படிமுறையின் மூலம், தேசிய சம்பள கொள்கையைப் பாதுகாக்கும் விதத்தில் செயற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்யப்படுத்தப்படாவிட்டால், இது அரச சேவையை மேலும் வீழ்ச்சியடையும் நிலைக்குத் தள்ளிவிடுவதோடு, நாட்டில் இருக்கும் மக்களுக்கு அரச துறை மீது இருக்கும் நம்பிக்கையையும் இல்லாமல் செய்துவிடும்.

> **தேசிய சம்பளக் கொள்கையைப் பாதுகாப்பதன் மூலம், தேசிய சம்பளக் கொள்கையின் ஊடாக அரச ஊழியர்களின் வேதனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இவ்வாறு தீர்க்கப்படும் பொழுதுதான், நாட்டில் ஒரு சீரான வினைதிறனான, தொடர்ச்சியான அரச சேவையை முன்னெடுத்துச் செல்ல முடியும்**

ஆகவே, தேசிய சம்பளக் கொள்கையைப் பாதுகாப்பதன் மூலம், தேசிய சம்பளக் கொள்கையின் ஊடாக அரச ஊழியர்களின் வேதனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இவ்வாறு தீர்க்கப்படும் பொழுதுதான், நாட்டில் ஒரு சீரான வினைதிறனான, தொடர்ச்சியான அரச சேவையை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

அண்மையில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, ஒன்றிணைந்த அரச சேவை தாதியர் சங்கத்தின் தலைவர் முருத்துவட்டுவே ஆனந்த தேரருக்குக் கடிதம் மூலம் சம்பள அதிகரிப்பினை வழங்குவதாக உறுதி அளித்திருந்தார்.

இவ்வாறு மேற்குறிப்பிடப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றாது, தேசிய கொள்கைகளை மீறி, அமைச்சரவை பத்திரம் ஊடாக சம்பள அதிகரிப்பானது வழங்கப்படுதல், 2003ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலையை உருவாக்கி விடும். இதனால் இந்தப் பிழையான முடிவு அரச சேவையில் பாரிய பிரச்சினையை ஏற்படுத்துமே அன்றி, இது சம்பளப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையாது.

இந்த விடயங்கள் சம்பந்தமாக, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கும் பிரதமருக்கும் தேசிய சம்பளம் கொள்கையைப் பாதுகாப்பதன் அவசியமும், அதேபோன்று இந்தச் சம்பள கொள்கையை மீறும் இடத்தில் எவ்வாறான பாதிப்புகள் ஏற்படும் என்பதையும் ஆணித்தரமாகத் தெரிவித்திருந்தது.

ஆகவே, தேசிய சம்பளக் கொள்கையைச் சரியான விதத்தில் பாதுகாத்து, அவற்றின் ஊடாக இந்தச் சம்பள பிரச்சினையைத் தீர்க்கும் பொழுதுதான், அரச ஊழியர்களுக்கு இடையே இருக்கின்ற பிரச்சினை, அதேபோன்று சம்பளக் கோரிக்கையை முன்வைத்து தொழிற்சங்கங்கள் நாளாந்தம் பணிப்பகிஸ்கரிப்புக்கு செல்லும் நிலையையும் தடுக்க முடியும் என்பதையும் உறுதியாகக் கூறிக்கொள்ளவதோடு அதற்காக தொடர்ந்து போராடுவோம்.

நன்றி: அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்



# உயிர்காக்க ஓடிவரும்

## கல்குடா சுழியோடிகள்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்



நீரில் மூழ்கி ஆட்கள் அதிகம் மரணிக்கும் உலகநாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பிடித்துள்ளது.

இலங்கையில் ஒரு நாளில் மூன்றுக்கும் மேற்பட்ட இறப்புகள் சம்பவிப்பதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்படி, வருடாந்தம் சுமார் 800 - 1,000 பேர் வரையில் இலங்கையில் நீரில் மூழ்கி இறக்கின்றனர். பெரும்பாலும் வார இறுதி மற்றும் நீண்ட வார இறுதி நாள்களிலேயே நீரில் மூழ்கும் சம்பவங்கள் நிகழ்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில், தற்செயலான மரணங்களுக்கான இரண்டாவது முக்கிய காரணமாக, நீரில் மூழ்குதல் இடம்பிடித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு அறிக்கையின்படி, இலங்கையில் நீரில் மூழ்கும் நிகழ்வுகளில், குளியல், விவசாயம், கட்டுமானம், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் போன்ற தினசரி வாழ்க்கையுடன் கூடிய சந்தர்ப்பங்களிலேயே நீரில் மூழ்குவதற்கான ஆபத்துக் காரணிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளன.



மது அருந்துதல், படகுகளில் உயிர் காக்கும் அங்கி இல்லாமை, மோசமான கண்காணிப்பு நடைமுறைகள், அடை மழைகாலத்தில் வெள்ளம், பாதுகாப்பற்ற கிணறுகள், திறந்த நீர்த்தேக்கங்கள், நீர் நிலைகள் ஆகியவை, நீரில் மூழ்கி இறப்பதற்கு பங்களிக்கும் காரணிகளாக அடையாளம் காணப்படுகின்றன. நீரில் மூழ்குவதில் பெண்களை விட, ஆண்களுக்கு நான்கு மடங்கு அதிக வாய்ப்பு உள்ளது.

இலங்கையில், நீரில் மூழ்குவதால் இறப்புகள் அதிகரித்திருக்கும் இவ்வாறானதொரு சூழ்நிலையில், மட்டக்களப்பு, கல்குடா சுழியோடிகள் அணி தற்றுணிவாகவும் தன்னார்வத்துடனும் முன்வந்து உயிர்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

பரந்து விரிந்த வங்காள விரிகுடா கடலின் பாசிக்குடா- கல்குடா கடற்பிரதேசம் வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகளின் வருகையால் சர்வதேச மட்டத்தில் பெயர் பெற்றது. இந்தக் கடலில் தவழ்ந்து, மிதந்து, நீந்தி, மூழ்கி சாகசம் புரியும் ஓர் அணியாக 'கல்குடா டைவர்ஸ்' அணி உருவாகி இருக்கிறது.

இடர்களின்போது ஆபத்தில் சிக்குவோரைக் காப்பாற்றுவதற்கென்று தொடங்கிய சிந்தனை, இப்பொழுது பெரியதோர் இடர்காப்பு அணியாக உருவாகுவதற்கு உதவியிருக்கின்றது.

"நாங்கள், கல்குடா மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தோடு மட்டும் எங்களது உயிர்காப்பு தன்னார்வத் தொண்டுப் பணியை வரையறுத்துக் கொள்ளாமல், நாட்டின் எந்தப் பாகத்திலும் நீரில் மூழ்கியவர்களை, சுழியோடித் தேடுதல் நடத்தி, அவர்களை மீட்டெடுக்கும் பணியை முற்றிலும் இலவசமாகவே செய்யச் சித்தமாக இருக்கிறோம்" என்று கல்குடா சுழியோடிகள் தெரிவிக்கின்றனர்.

கல்குடா சுழியோடிகள் அணியைச் சேர்ந்த 47 சுழியோடிகள், கடந்த வார இறுதியில் 'ஸ்ரீ லங்கா லைப் சேவிங்' எனும் அமைப்பால் நீச்சல் பயிற்சி, நீரில் மூழ்குவோரை காப்பற்றல், நீரில் மூழ்கி காணாமல் போவோரை சுழியோடித் தேடுதல் உள்ளிட்ட பல்வேறு உயிர்காப்புத் திறன்களில் பயிற்சிகள் அளிக்கப்பட்டார்கள்.

மூன்று கட்டங்களாக இடம்பெற்ற 'உயிர்காக்கப் பயில்வோம்' எனும் இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றிய 47 பேரிலிருந்து, இருவர் சுழியோட்டத்தில் சர்வதேச தரத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அந்த அணியின், சுழியோடிகளான 21 வயதுடைய முஹம்மத் கபீர் இப்றாஹிம், 27 வயதுடைய அப்துல் மஜீத் ஹலீம் ஆகியோர் ஏழு நிமிடங்களில் 200 மீற்றர் கடல் தூரத்தை நீந்தியும் மேலும் 100 மீற்றர் தரைத் தூரத்தை ஓடியும் முடித்து, தமது ஆற்றலை நிறுவியுள்ளனர்.

"எதிர்காலத்தில், இதுபோன்ற சிறந்த சுழியோடிகளை உருவாக்குவது, எமது இலக்காகும். பாடசாலை மாணவர்களுக்கு நீச்சல் கற்பிக்கவும் உயிர் காப்பு நடவடிக்கையில் ஈடுபடவும் பயிற்சி அளிக்கவுள்ளோம். தற்போது எமது அணியில், ஆண்கள் மட்டுமே சுழியோடிகளாகப் பயிற்றப்பட்டு உள்ளார்கள். இடர்களில் அகப்பட்டு பாதிக்கப்படும்போது, அவர்களில் ஆண்கள், பெண்கள் என்ற வித்தியாசமில்லை. நீரில் மூழ்கும் நிலைமை எவருக்கும் ஏற்படலாம். அதனால் இந்த ஆற்றல்களில், பெண்களின் பங்கும் இருக்க வேண்டும்" என கல்குடா சுழியோடிகள் அணியின் நிர்வாகக் குழு தெரிவிக்கின்றது.

கல்குடாவிலுள்ள 'ஏ - விஷன்' நிறுவனம் தோற்றம் பெற்று, அதன் கீழ் பெண்கள் பிரிவு, கல்விப் பிரிவு, நிவாரண சேவைப் பிரிவு, சுழியோடிகள் அணி என நான்கு கிளைகள் இயங்கி வருவதாக 'ஏ.விஷன்' நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். சதீக் கூறுகின்றார். இவர், நிறுவனத்தின் ஊடான சமூக சேவைக்கு மேலதிகமாக ஆசிரியராகவும் ஊடகவியலாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

'ஏ - விஷன்' நிறுவனத்தின் சேவைகள் பற்றி, நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். சதீக் மேலும் கூறியதாவது: "தற்போதைய சூழ்நிலையில், இலங்கையில் கடல், வாவி, ஆறு, குளம் மற்றுமுள்ள நீர் நிலைகளில், ஆட்கள் நீரில் மூழ்கி மரணித்தல் அதிகரித்துள்ளது. அதனால், எமது சுழியோடிகள் அணி அதன் சேவையை விஸ்தரித்துள்ளது. எதிர்காலத்தில், இந்தச் சுழியோடிகள் அணி ஒவ்வொரு மாவட்டத்திலும் அதன் சேவைகளை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. அவசர உதவிக்கு 0779915841, 0762828338, 0777176652 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்" என்கிறார்.

'ஏ - விஷன்' அமைப்பின் முதன்மை ஆலோசகரும் சமூக சேவையாளருமான அப்துல் காதர் நியாஸ் கூறுகையில், "உயிர் காப்பு சேவைக்கூடாக இந்தப் பிராந்தியத்திலும் நாட்டிலும் இனங்களுக்கிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கம். கடந்த டிசெம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் இருந்து இதுவரை கடல் பிராந்தியத்தில் இடம்பெற்ற நான்கு நீரில் மூழ்கிய சம்பவங்களில், 'கல்குடா டைவர்ஸ்' அணி பிரசன்னமாகியிருந்தது.

"கல்குடா கடலில் தமிழ் சகோதரர் ஒருவரின் சடலத்தை மீட்டெடுத்துக் கொடுத்தோம். தைப்பொங்கல் தினத்தன்று, சின்னவெம்பு கடற்பகுதியில் நீரில் மூழ்கிய பாடசாலை மாணவனின் சடலத்தை மீட்டெடுக்க அதீத பிரயத்தனம் மேற்கொண்டோம்.

"காயான்கேணியில் தந்தை, மகன் ஆகியோரின் சடலங்களை மீட்டெடுத்தோம். அதனைத் தொடர்ந்து பாசிக்குடாவில் ஒரு சடலத்தை மீட்டோம். இந்த அர்ப்பணிப்பில் நாங்கள் மன நிறைவைக் காண்கின்றோம்.

"இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் வகையில், இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்குகின்றோம். இனவாத சிந்தனையுள்ளவர்கள், அரசியல் அதிகாரத்துக்காக அலைகின்றபோது, இப்பிரதேசங்களில் இயல்பாகவே உள்ள இனங்களுக்கு இடையிலான இன ஐக்கியமும் சமாதான சகவாழ்வும் சீர்குலைக்கப்படுகின்றன. இதைச் சீர் செய்வதுதான் எமது தன்னலமற்ற மனிதாபிமான சேவையின் நோக்கம்" என்று தெரிவித்தார்.

'ஏ - விஷன்' அமைப்பின் சேவைகளை இனம், மதம் பேதம் கடந்து பலரும் பாராட்டி வருகின்றனர். கிரான் வாழ் தமிழ் இளைஞர்களின் அமைப்பு, நன்றி நவிலல் கடிதத்தை நேரில் சென்று வழங்கியுள்ளது. அதில், 'கல்குடா டைவர்ஸ் அணி, களத்துக்கு வருகை தந்து, கடலில் காணாமல்போன மாணவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டதோடல்லாமல், உடலங்களை ஏற்றிச் செல்கின்ற பணியையும் மேற்கொண்டது. இந்த மகோன்னத சேவைக்கு, நன்றி என்ற ஒரு சிறு வார்த்தை மட்டும் பிரதியுபகாரமாகாது. காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும் அது ஞாலத்தில் மானப்பெரிது' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

# கோடிகள் கரையும் கரைகள்



ரஸீன் ரஸ்மின்





'ஒரு நூலகத்தையும் ஒரு தோட்டத்தையும் வைத்திருக்கும் ஒருவருக்கு வேறெதுவும் தேவையில்லை' என்பது மூதறிஞர் வாக்கு.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மத்திய, மாகாண அரசுகள் பல திட்டங்களை வகுத்துக் கொடுத்தாலும் அதை முறையாகப் பின்பற்றுவது எமது கடமையாகும். காடுகள், கடல்கள், ஆறுகள், வனவிலங்குகள் போன்ற இயற்கைச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பது, தலையாய கடமையாக உணரப்பட்டுள்ளது.

அந்த வகையில், புத்தளம் மாவட்டத்தின் கடல் வளத்தைப் பாதுகாப்பதற்காக, அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. புத்தளம் மாவட்ட கரையோரத்தில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக 2,275 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இவ்வளவு பாரிய அளவு நிதி, இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், இதுவரை கரையோர அரிப்பில், எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, திட்டமிடப்பட்ட கரையோர பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ரூபாய் 2159.4 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதுடன், அவசரகால கரையோர நிர்மாணப் பணிகளுக்காக 115.6 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

வடமேல் மாகாணத்தில், கடலரிப்பு 1976, 1977 இல் தொடங்கியதாக வரலாறுகள் குறிப்பிடுகின்றன. புத்தளம் மாவட்டத்தின் வென்னப்புவ, நைனாமடம், வாய்க்கால் கரையோரப் பகுதிகளில்தான், முதலாவது அரிப்பு ஏற்பட்டதாக கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு ஏற்படுகின்ற கடலரிப்பைக் கட்டுப்படுத்தவும் கரையோர பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், மகாவலி அபிவிருத்தி மற்றும் சூழலியல் அமைச்சின் கீழ் உள்ள கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

அத்துடன், கட்டுனேரிய, மாரவில - தூவவத்த, முதுகடுவ, தல்வில, அம்பகடவில, முதுபந்திய, கப்பலடி, நுரைச்சோலை, இலந்தையடி, உடப்பு ஆகிய கடற்கரையோரங்களில் பாரிய கருங்கற்களை போடுவதற்கும், கடலோர பாதுகாப்பு அணை வேலிகளை அமைப்பதற்கும் பல மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டு உள்ளதாக, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தால் 2018 ஆம் ஆண்டு வெளியிட்ட ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு, 2011- 2020 ஆம் ஆண்டு வரை, கடலரிப்பைத் தடுப்பதற்காக பல மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ள போதிலும், கடலரிப்பின் தீவிரம் இன்னமும் குறையவில்லை. இதேவேளை, வீடுகள், கட்டடங்கள் என்பனவற்றின் நிர்மாணப்பணிகள் அதிகரித்து வருகின்றமையால், மண் அகழ்வு நடவடிக்கைகளும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் மா ஓயா, தெதுரு ஓயாவில் இவ்வாறு தொடர்ச்சியாக மணல் அகழ்வதால், கடற்கரையில் போதிய மணல் இல்லாத காரணத்தால், கரையோரம் அரிப்புக்கு உள்ளாகி வருவதாக ஒரு குற்றச்சாட்டும் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், புத்தளம் மாவட்டத்தில் கடற்கரையை அண்டிய இடங்களில் குடியிருப்புகள், ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட்டமையால் அங்குள்ள கண்டல் தாவரங்களும் அழிக்கப்படுகின்றன. இதுவும் கடுமையான கடலரிப்பு ஏற்படக் காரணமாக அமைவதாக, சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடமேற்கு கரையோரத்தில் ஏற்பட்டுள்ள பெரும்பாலான கடலரிப்பு, மா ஓயா மற்றும் தெதுரு ஓயாவுக்கு வடக்கே இருப்பதாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

புவி வெப்பமடைதல், கடல் மட்ட உயர்வு, கடல் நீரோட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் என்பனவும் கடல் அரிப்பை ஏற்படுத்துகிறது எனவும் கடல்சார் நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

இதேவேளை, வடமேல் மாகாணத்தில் இரணவில, முத்துபந்திய வடக்கு, உடப்பு, நுரைச்சோலை, இலந்தையடி ஆகிய நான்கு இடங்கள், எதிர்காலத்தில் கடுமையான கடலரிப்புக்கு உள்ளாகும் என அடையாளம் காணப்பட்டுள்ளன.

இலங்கையின் சுற்றுலா தளங்களில், புத்தளம் மாவட்டம் மிகவும் முக்கியமானதாக விளங்குகிறது. இந்தநிலையில், புத்தளம் மாவட்டத்தில் இவ்வாறு பாரிய கடலரிப்பால் கரையோரப்பகுதிகள் பாதிக்கப்படுவதால், இந்த பகுதிகளுக்கு சுற்றுலா வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள், பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன், பாரிய கடலரிப்பால் இந்தப் பகுதிகள், இயற்கை அழிவுகளுக்கு முகம் கொடுத்துள்ளதுடன், இயற்கை அழகும் கொஞ்சம் கொஞ்சமாக மங்கிக் கொண்டே செல்வதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் சுற்றுலாப் பயணிகளின் வருகை, எதிர்காலத்தில் வெகுவாகக் குறைவடையும் சாத்தியமும் இருப்பதாகவும் எதிர்வுகூறப்படுகிறது.

மாலைதீவுக்கு சற்றும் சளைக்காத அதிசயங்கள், புத்தளம் மாவட்டத்திலும் இருக்கின்றன. கற்பிட்டி தீவுகள் இதற்குச் சிறப்பான உதாரணமாகும். புத்தளத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் எதையும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

புத்தளம் மாவட்டம், வரலாற்று ரீதியாகப் பெறுமதியுள்ள ஒரு பிரதேசமாகும். மனித குடியேற்றங்களில் ஆரம்பமான தம்பன்னி பூர்வீக குடியேற்றம் அமைந்திருப்பதும் இதற்கு அண்மையிலாகும்.

நீரில் காணக் கூடிய மிகப்பெரும் மீனான திமிங்கிலம், நிலத்தில் காணக்கூடிய மிகப் பெரும் மிருகமான யானையையும் சுற்றுலாப் பயணிகளால் ஒரே பயணத்தில் கண்டுகளிக்கக்கூடிய இடமாகவும் இப்பிரதேசம் காணப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக, டொல்பின்கள், பவளப்பாறைகள், பட்டம் விடும் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுகள், வில்பத்து கங்கேவாடி பிரதேசத்தில் முயல்கள், மான்கள், சிறுத்தைகள் போன்றவற்றையும் இப்பிரதேசங்களில் காண முடியும்.

இத்தனை வளங்களையும் கொண்ட புத்தளம் மாவட்டத்தில், தற்போது கடல் வளங்களையும் பாதுகாக்கத் தவறிவிட்டால், அது சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

கொழும்பு, பாணந்துறை போன்ற பகுதிகளில் இதுபோன்று பாரிய கடலரிப்பு ஏற்பட்ட போது, வெளிநாட்டு நிதி உதவியுடன் அங்கு முறையான தடுப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதுபோல, புத்தளம் மாவட்டத்திலும் ஆபத்தின் விளிம்பில் உள்ள கரையோரப் பகுதிகளைப் பாதுகாப்பதற்கான, முறையான வேலைத்திட்டங்களை அவசரமாக ஆரம்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

எனவே, இந்த விடயத்தில் ஜனாதிபதி உடனடியாக தலையிட்டு, விசேட திட்டமொன்றை அமல்படுத்தி, இதற்கென திட்டக்குழுவொன்றை நியமித்து, புத்தளம் மாவட்ட கடற்கரையோரப் பகுதிகளைப் பாரிய இயற்கை அழிவிலிருந்து பாதுகாக்க, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே, இந்தப் பகுதி மக்களின் ஒரே எதிர்பார்ப்பாகும்.





உணவையும் நீரையும் தேடி

# வீட்டுக்கு வரும் காட்டு விலங்குகள்

## சுத்தமான காற்றை சுவாசிக்கும் இறுதி பரம்பரை....



க. சுந்தரலிங்கம்





காடுகள், 'உலகின் இதயம்' என்று வர்ணிக்கப்படுகின்றன. காடுகளை, கவிஞர்கள் சிருஷ்டியின் சித்திரங்களாகவும் மெய்ஞானிகள் அமைதியின் இருப்பிடமாகவும் விஞ்ஞானிகள் பூமியில் மனிதர்கள் வாழ்வதற்கு அவசியமான காரணிகளை வழங்கும் தொழிற்சாலையாகவும் கருதுகின்றனர்.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த காடுகள், இதயமற்ற மனிதர்களால் அழிக்கப்படுகின்றன. மனிதன் சுத்தமான காற்றைச் சுவாசிப்பதற்கு, இந்தக் காடுகளே காரணமாக இருக்கின்றன. காரணம் மனித செயற்பாடுகளால் வெளியிடப்படும் காபனீர் ரொட்சைட்டை, மரங்கள் சுவாசித்து, உயிர் வாழ்வதற்குத் தேவையான சுத்தமான ஒட்சிசனைத் தருகின்றன.

எமக்குத் தேவையான நீர் வளத்தையும் காடுகள் தான் பெற்றுக்கொடுக்கின்றன. ஆயிரக்கணக்கான உயிரினங்கள் வாழ்வதற்கு, வீடாகவும் காடுகள் அமைந்துள்ளன. மண் அரிப்பைத் தடுத்து, பாலை நிலங்களாக மாறுவதைக் காடுகள் தான் தடுக்கின்றன. அது மட்டுமல்லாமல், நாம் மகிழ்ச்சியாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்குத் தேவையான மரம், செடி, கொடிகள், ஜீவராசிகள் என அத்தனையையும் இந்தக் காடுகள் தான் பாதுகாக்கின்றன.

ஐந்தறிவு படைத்த மிருகங்கள் கூட, தான் வாழும் சூழலைப் பாதுகாக்கின்றன. அவை ஒரு போதும், மரங்களைச் சிதைப்பதில்லை; இயற்கையைக் காயப்படுத்துவதில்லை. ஆனால், இவை அத்தனையும் கற்றறிந்த மனிதன், அபிவிருத்தி என்ற பெயரில், காடுகளை ஈவு இரக்கமின்றி அழிக்கின்றான். அதன் முக்கியத்துவத்தை உணராத மனிதன், வாழ்விடத்திற்காகவும் அற்பசொற்ப மகிழ்ச்சிக்காகவும் காட்டைத் தீயிட்டுக் கொழுத்துகிறான். இதனால் ஏற்பட போவதென்ன?

சுத்தமான காற்றைச் சுவாசிக்கும் இறுதியான பரம்பரை, நாமாகத் தான் இருப்போம் என்பது தான் உண்மை. எமது நாடும் இந்தக் காடழிப்பு விடயத்தில் விதிவிலக்கல்ல; நகரமயமாக்கல், அபிவிருத்தி, வீடமைப்பு, தொழிற்சாலைகள், வர்த்தகம் என்ற போர்வைகளில் பல காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இதன் விளைவுகளை, நாம் இன்று அனுபவித்துக்கொண்டு தான் இருக்கின்றோம். காலநிலை பருவமாற்றம், குடிநீர் தட்டுப்பாடு, மழையின்மை, மழை வீழ்ச்சி குறைதல் என பல்வகையான பாதிப்புகளை தற்போது அனுபவித்த வண்ணம் உள்ளோம். எனினும், இதை பற்றி ஒரு துளியளவு கூடச் சிந்திக்காது, தொடர்ந்தும் காடழிப்பு இடம்பெற்று வருகின்றது என்றால், அது மிகவும் கவலைக்கும் வேதனைக்கும் உரிய விடயமாகும்.

எமது நாட்டில், கடந்த காலங்களில் காடழிப்பு தொடர்பாகப் பாரிய அளவில் பேசப்பட்டன. ஒரு சில தொலைக்காட்சிகள், இரவு பகலாக இதைப் பற்றித்தான் செய்திகளாக்கின. சிங்கராஜா வன அழிப்பு தொடர்பாக என்றுமில்லாத அளவுக்கு பேசப்பட்டன. ஆனால் எத்தனையோ, காடுகள் பல்வேறு செயற்பாடுகள் காரணமாகத் தற்போது அழிக்கப்பட்டு வருகின்றன. தற்போது இந்த ஊடகங்களும் வாயடைத்துப் போய் இருப்பது, 'காலத்துக்கு மாத்திரம் முளைக்கும் காளான்களா' என எண்ணத்தோன்றுகின்றது.

எது எவ்வாறான போதிலும், எமது நாட்டை பொறுத்தவரையில் 1990 இற்கும் 2000 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சுமார் 28,000 ஹெக்டெயர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இது எமது நாட்டில் உள்ள காட்டு வளத்தில் 1.4 சதவீதமாகும். இந்தக் காடழிப்பு 2000 தொடக்கம் 2005 வருட காலப்பகுதியில்; 1.43 சதவீதத்தால் அதிகரித்து வருவதாக ஆய்வுகள் எடுத்துகாட்டுகின்றன.

இது இவ்வாறிருக்க, பசுமையான காடுகள் அதிகமாக மலையகப் பகுதிகளிலேயே காணப்படுகின்றன. இதனால், இந்த நாட்டுக்கு தேவையான நீர் வளம், மலையகப் பகுதிகளிலிருந்து தான் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. பெரும்பாலான நீர் மின் உற்பத்திக்கு தேவையான நீரை, இந்தப் பகுதியிலிருந்து தான் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. குடிப்பதற்கும் விவசாயத்துக்கும் தேவையான நீர் இப்பகுதியிலிருந்து தான் பெறப்படுகின்றது.

அப்படிப்பட்ட அருமையானதும் அழகானதுமான பூமிதான் மலையகம். நீர் வீழ்ச்சிகள் சீறிப்பாய்வதும், ஆறுகள் ஓடைகள், அழுகுற வீழ்வதும் இந்த பிரதேசங்களில் தான். இதற்கு பிரதான காரணமாக அமைவது, எமது பிரதேசங்களில் காணப்படுகின்ற காட்டு வளமாகும். இதனால் வெளிநாட்டவர்களின் மனம் கவர்ந்த பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

இப்படிப்பட்ட பெறுமதிமிக்க காட்டுவளத்தைப் பெறுமதி அறியாத பலர், அழிக்கும் செயற்பாட்டில் ஈடுப்பட்டுள்ளனர். இதன் விளைவாக, இன்று பல்வேறு பிரச்சினைகள் எம் மத்தியில் மிகவும் பூதாகரமாக உருவெடுத்து வருகின்றன. குறிப்பாக, தோட்ட நிர்வாகங்கள் தேயிலை உற்பத்தியைக் கண்டு கொள்ளா, மரங்களை தறித்து அதன் மூலம் அதிக இலாம் தேட முயற்சிப்பதனால் இன்று தேயிலை மலைகளில் மழை வீழ்சிக்காக ஒதுக்கப்பட்ட பெரும் பகுதியான காட்டு வளம் அழிக்கப்பட்டுள்ளன.

அது மாத்திரமின்றி வீடுகளைக் கட்டுவதற்காகவும் இந்தக் காட்டு வளம் அழிக்கப்படுகின்றது. இவ்வாறு மலையகப் பகுதியில் காடுகள் அழிக்கப்படுவதன் காரணமாக, அச்சமடையும் உயிரினங்கள் தங்களுடைய வாழ்விடங்களை மாற்றிக்கொண்டுள்ளதுடன், மனிதனுடைய செயற்பாட்டை எதிர்க்கும் வகையில், தாக்குதல்களையும் மேற்கொள்கின்றன. இவற்றுக்குச் சிறந்த உதாரணங்களாக, குளவி கொட்டுதல், சிறுத்தைகள், பன்றிகள் ஆகியவற்றின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக, பலர் உயிரிழந்துள்ளனர்.

வருடம் தோறும் ஏற்படுகின்ற வரட்சியான காலப்பகுதியில், காடுகளுக்குத் தீ வைப்பதன் காரணமாக, நீர் வளம் நிறைந்து காணப்படும் மாவட்டங்களில் கூட, தற்போது குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விவசாயத்துக்கு நீரின்றி விவசாய நிலங்கள் கைவிடப்பட்டுள்ளன.

காடுகளில் வாழும் உயிரினங்கள, தங்களுடைய வாழ்வாதாரம் அழிக்கப்பட்டுள்ளதால் உணவையும் நீரையும் தேடி, மக்கள் குடியிருப்புகளை நோக்கி வர ஆரம்பித்துள்ளன. கடந்த ஜனவரி மாதம் கூட, வட்டவளை பகுதியில் உள்ள இரண்டு மாடுகளை, சிறுத்தைகள் கொன்று தின்றுள்ளன.

மஸ்கெலியா, ஹட்டன், எபோஸ்லி, கொட்டகலை உள்ளிட்ட பல பகுதிகளில் வீடுகளுக்கே சிறுத்தைகள் வந்து, வீட்டில் வளர்க்கும் நாய்கள், ஆடுகள், கோழிகள் எனக் கொண்டு சென்றுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பல காடுகளுக்குள் இனந்தெரியாதவர்கள் வைத்த தீயின் காரணமாக, பல பெறுமதிமிக்க வன பிரதேசங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் இந்தக் காடுகளில் வாழ்ந்த, மனிதனுக்கு நன்மை தரக்கூடிய எத்தனையோ உயிரினங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அது மாத்திரமின்றி, காட்டு விலங்குகளுக்குத் தேவையான உணவு, குடிநீர் இல்லாது போய், அவற்றின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டதால் அவை உணவையும் நீரையும் தேடி அலைந்து திரிகின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது.

கடந்த சில வாரகாலமாக, பொகவந்தலாவை, நோர்வூட், ஹட்டன், கினிகத்தேனை, கொட்டகலை உள்ளிட்ட பல பரவலான மக்கள் வாழும் இடங்களுக்கு, குரங்குகள் கூட்டம் கூட்டமாக வர ஆரம்பித்துள்ளன. இவற்றின் வருகை காரணமாக, வீட்டுத்தோட்டங்களில் காணப்படும் பயிர்கள், பழங்கள், மரஞ்செடிகொடிகள் அழிவடைய ஆரம்பித்துள்ளன.

நீர் போசன பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் தீ வைப்பின் காரணமாக, நீருற்றுக்கள், அரியவகை தாவரங்கள் ஆகிய அழிவடைந்துள்ளன. இதனால் இன்று நீர் போசன பிரதேசங்களுக்கு மழை வீழ்ச்சி குறைவடைந்து, பாரிய அளவில் நீர்த்தேக்கங்களில் நீர் வற்றிப்போய் உள்ளன. இதனால், இன்று நாம் மின்சாரத்தைக் கூட, தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளன.

எனவே, காடழிப்பு என்பது, எம்மை நாமே அழித்துக்கொள்ளும் செயல் என்பதால், இதனை உடன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன், காடுகளைப் பாதுகாப்பதற்கு மரங்களைப் பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

அவ்வாறு இல்லாவிடின், இந்த முழு நாட்டு மக்களும் பல்வேறு துன்பங்களுக்கு உட்படுவதை, எவராலும் தடுக்க முடியாத ஒன்றாக மாறிவிடும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

# கவனிப்பார் யாருமில்லாத மாந்தை கிழக்கு



சுப்பிரமணியம் பாஸ்கரன்








முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா, கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், மிகவும் பின்தங்கிய பிரதேசமாக மாந்தை கிழக்குப் பிரதேசம் காணப்படுகின்றது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவானது, யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தெற்கே வன்னியில் அமைந்துள்ளதுடன் அம்பாள்புரம், கரும்புள்ளியன், கொல்லவிளாங்குளம், மூன்றுமுறிப்பு, நாட்டான்கண்டல், ஒட்டறுத்தகுளம், பாலிநகர், பாண்டியன்குளம், பொன்னகர், பூவரசங்குளம், செல்வபுரம், சிறாட்டிகுளம், சிவபுரம், வன்னிவிளாங்குளம், விநாயகபுரம் ஆகிய 15 கிராம அலுவலர் பிரிவுகளையும் ஏறத்தாள 68 கிராமங்களையும் உள்ளடக்கிய வகையில் சுமார் 490 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட பிரதேசமாகும்.

மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு, வடக்கில் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவும் மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளில் மன்னார், வவுனியா மாவட்டங்களும் அமைந்துள்ளன.

இவ்வாறு அமைந்துள்ள பிரதேசத்தில், தற்போது 3,223 குடும்பங்களைச் சேர்ந்த உள்ள 9,858 பேர் வாழ்ந்து வருகின்றனர் என்பதுடன் தனியான பிரதேச சபை, தனியான பொலிஸ் நிலையம், வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கமநல சேவை நிலையம், பாடசாலைகள் எனப் பல்வேறு நிர்வாக கட்டமைப்புகளும் அமைந்துள்ளன.

குறிப்பாக, இந்தப் பிரதேசத்தில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் அன்றாடம் அனுபவிக்கின்ற துன்பங்கள் ஏராளம். குறிப்பாக, போக்குவரத்தில் உள்ள பிரச்சினைகள், சீரான வீதிகள் இன்மை, தொழில் வாய்ப்பின்மை, விவசாய உற்பத்தி பொருட்களுக்கான உரிய சந்தை வாய்ப்பின்மை போன்ற தீர்வுகாணப்படக் கூடிய பிரச்சினைகள் இந்த மக்களைப் பாதிக்கின்ற நிலை காணப்படுகின்றது. இதனை விட, காட்டு யானைகள், குரங்குகளின் தொல்லைகள் என்றும் பிரச்சினைகள் நீள்கின்றன.

இதனால், இந்தப் பிரதேசங்களில் இருந்த மக்கள் பலர், வசதி வாய்ப்புகளை நாடி, வெளியிடங்களுக்குச் சென்று வாழ்கின்றனர்.

வன்னியின் குறுநில மன்னர்கள் மக்களுக்கு குறைகளின்றி சிறப்பாக ஆண்ட பகுதியாகவும் வரலாறுகள் குறிப்பிடுகின்ற இந்த பிரதேசமானது ஒரு நீண்ட பாரம்பரியத்தையும் வரலாற்றையும் தமிழர் தம் பண்பாட்டையும் கொண்ட பிரதேசமாகும். இவ்வாறான வன்னியின் பண்பாடு, கலை, கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன் அடுத்த சந்ததிகளுக்கு இவை கடத்தப்பட வேண்டும்.

அவ்வாறெனின், இவ்வாறான கிராமங்களும் கிராமங்களின் வாழ்க்கை முறைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கையின் பிரதானமான ஆறுகளாக காணப்படுகின்ற பாலியாறு, பறங்கியாறு ஆகிய இரு ஆறுகள், மாந்தை கிழக்கு பிரதேசத்தை ஊடறுத்துச் செல்கின்றன.

வடமாகாணத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான வவுனிக்குளம், பாலியற்றை மறித்து அமைக்கப்பட்டுள்ளதுடன் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் குளமும் அதன் கீழான குடியேற்றங்களும் அமைந்துள்ளதுடன் கால போகத்தின் போது 6,060 நெற்செய்கையும் 1,200 ஏக்கர் வரையான மேட்டு நிலச் செய்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆரம்பகாலத்தில் ஆற்றுப்படுக்கைகளை மையமாகக் கொண்டே மக்கள் வாழ்ந்தார்கள் பல சிற்றசுகள் உருவாகின என்றும் இதற்கு ஆதாரங்களாக சிதைவடைந்த பல தொல்பொருள் அடையாளங்கள் இன்றும் காணப்படுகின்றன

பறங்கியாற்றை அண்டிய பகுதியில் பனங்காமம் சிவாலயமும் பாலியாற்றை அண்டிய பகுதியில் சிவபுரம் சிவாலயமும் காணப்படுகின்றன.

இதேபோன்று பல்வேறுபட்ட தொன்மையான வரலாற்று ஆலயங்கள், கட்டடச் சிதைவுகள் என்பனவும் நூண்றாண்டு கண்ட பாலியாறு கறுப்பு பாலம், பறங்கியாறு பாலம் என்பனவும் காணப்படுகின்றன.

இவ்வாறான தொன்மையான வரலாற்றைக் கொண்ட மாந்தை கிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது, பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. மக்களுக்கான மின்சார வசதி என்பது மாத்திரமே நூறு சதவீதம் கிடைத்திருப்பதாகவும் ஏனைய வசதிகள் இன்னும் கிடைக்கவில்லை என்பதையும் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப்பகுதியின் சிற்றரசாக காணப்படுகின்ற பிரதேச சபையில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சியமைத்து ஐந்து வருடங்கள் மக்கள் ஆட்சியில், நடந்தது எதுவும் இல்லை என்று மக்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

அதாவது, குறித்த பிரதேச சபைக்குச் சொந்தமான நட்டங்கண்டல் பொதுச்சந்தை, பாண்டியன்குளம் பொதுச்சந்தை, பாலிநகர் பொதுச்சந்தை, விநாயகபுரம் பொதுச்சந்தை என அனைத்து சந்தைகளும் பல மில்லியன் ரூபாய் செலவில் கட்டப்பட்டு இருக்கின்ற போதும், அவை அனைத்தும் கைவிடப்பட்ட நிலையில், கால்நடைகளின் உறைவிடமாக காணப்படுகின்றன.

பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகள் எதுவும் புனரமைக்கப்பட்டு அல்லது மக்கள் போக்குவரத்து செய்யக்கூடிய நிலையில் காணப்படவில்லை. பிரதேச சபை நிர்வகிக்க வேண்டிய எந்தக் கட்டமைப்புகளையும் நிர்வகிப்பதாக இல்லை. வருமானம் தரக்கூடிய வழிகள் பற்றிச் சிந்திப்பது அல்லது வருமானங்களை தேடிக் கொள்வதாக, பிரதேச சபையின் தலைமைகள் இல்லை என்பதையும் சபையின் பலரும் சுட்டிக் காட்டுகின்றனனர்.

அண்மையில் இப்பிரதேச சபையின் உப தவிசாளர் தெரிவிக்கையில், "ஆளுமையற்ற தலைமை ஒன்றை இந்தச் சபைக்கு நாங்கள் கொண்டு வந்ததில் வெட்கப்படுகிறோம்" என்றார்.

இவ்வாறு வரலாற்று தொன்மையும் வாழ்வியல் அடையாளங்களையும் கொண்ட இந்தப் பிரதேசத்தின் அடையாளங்கள் அழிந்து போகின்றன. குறிப்பாக, இந்த மக்களுடைய வாழ்வியல் துன்பங்களை நீக்குவதற்கு, உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இந்தப் பிரதேச மக்களின் கோரிக்கையாகும்.









# எதற்கும் முகங்கொடுக்கத் தயாராக இருப்பதே புத்திசாலித்தனம்

திடீரென விடுக்கப்படும் அறிவிப்புகளால் சில நேரங்களில், மக்கள் விழிப்பிதுங்கி திக்குமுக்காடிய காலமிருந்தது. கொரோனா வைரஸ் தொற்றின் போது, எந்தெந்த பிரதேசங்கள், வீதிகள், ஒழுங்கைகள் மூடப்படுகின்றன என்ற அறிவிப்பு வெளியானதன் பின்னர், இவ்வாறு திக்குமுக்காடிவிடுகின்றனர்.

ஆகக் குறைந்தது 14 நாள்களுக்கும் கூடியதாக மூன்று மாதங்களுக்கும் இறுக்கி மூடப்பட்டிருக்கும். இவ்வாறான காலப்பகுதியில் மக்கள் தங்களுடைய அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு, பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். இதனை அனுபவித்தவர்களுக்கு மட்டுமே, இதன் வலிகளை உணர்ந்து கொள்ளமுடியும்.

எனினும், முதலாவது அலையின் போது, நாடே இழுத்து மூடப்பட்டிருந்த போது, அதன் தாக்கத்தை ஒவ்வொருவரும் உணர்ந்தே இருந்திருப்பர். அதனால்தான், அடுத்தடுத்த அலைகளின் போது, பிறப்பிக்கப்பட்ட சுகாதார நடைமுறைகளை ஆகக்கூடுதலானோர் அச்சொட்டாகப் பின்பற்றினர்.

எனினும், கொழும்பில் சுமார் ஐந்து பிரதேசங்களில் 36 மணிநேர நீர்வெட்டு, திடீரென அமல்படுத்தப்பட்டமையால், அப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். முன்கூட்டியே அறிவித்திருந்தால், ஓரளவுக்கேனும் நீரை சேமித்துவைத்திருப்பர். எனினும், கொழும்பு பிரதேசங்களுக்கு நீரை கொண்டுவரும் பாரிய நீர்க்குழாய்களில் ஏற்படும் வெடிப்புகள், சேதங்களின் போது முன்கூட்டிய அறிவிப்பை எதிர்பார்க்கமுடியாது.

இதனால், அந்தந்த பிரதேசங்களில் இருக்கும் ஹோட்டல்கள் மூடப்படும்; மூவேளை உணவையும் ஹோட்டல்களில் எதிர்பார்த்திருக்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள், பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுப்பர். இன்றும், நாளையும் விடுமுறை நாள்கள் என்பதால், பலரும் சொந்த ஊருக்குப் படையெடுத்துவிடுவர்.

இதுதான் தருணமென, கேள்வி அதிகரிக்கும் பொருட்களுக்கான விலையை, பெரும் முதலைகளும் சிறுமுதலைகளும் அதிகரித்துக்கொள்வர். இவற்றுக்கெல்லாம் முன்கூட்டியே அறிவிப்பு விடுக்காமையே பிரதான காரணியாக இருக்கிறது. இதற்கிடையே நாளொன்றுக்கு ஒரு மணிநேரம் மற்றும் 45 நிமிடங்கள் மின்வெட்டை அமல்படுத்துவதற்கான அங்கிகாரத்தை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு வழங்கியிருக்கிறது.

இரவு வேளையிலும் மின்வெட்டு அமல்படுத்தப்படவிருப்பதால், முன்கூட்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்வது சிறந்தது. எனினும், மண்ணெண்ணெயைக் கொள்வனவு செய்துகொள்வதற்காக இருந்த வரிசை, நீண்டுகொண்டு செல்கின்றதே தவிர, குறைந்தபாடில்லை. இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது காஸ் அடுப்புகள் வெடித்தமையாகும்.

ஆங்காங்கே அவ்வப்போது, சில வகையைச் சேர்ந்த சிலிண்டர்களுக்கு பொருத்தப்பட்டிருந்த காஸ் அடுப்புகள் வெடித்துள்ளன. எனினும், உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் அச்சம்பவங்கள் அமையவில்லை என்பதையிட்டு திருப்தி கொள்ளவே வேண்டும். எரிபொருளுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு காரணமாகவே, மின்வெட்டை அமல்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக, தங்களுக்கு இலங்கை மின்சார சபை கூறியிருக்கிறதென பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தவிசாளர் அறிவித்திருக்கின்றார். ஆகையால் எதற்கும் முகங்கொடுப்பதற்கு தயாராக இருப்பதே புத்திசாலித்தனமாகும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நான் என்பது நான் இல்லை. நான் என்னும் தேகம் அழிந்துவிடும். உயிர்போனதும் நான் யார்?

ஆனால், வாழும் காலத்தில் வாழ்வாங்கு வாழ்பவர்களின் நாமம் அழிவதில்லை. இது கொடுப்பனவு உள்ள நல்லவர்களுக்கேயானது.

அரசன் பெயர் காலப்போக்கில் அழிந்துவிடலாம். ஆயினும், தான் ஆட்சிசெய்த காலத்தில், தனது நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் மட்டுமல்ல, உலகம் வியக்கும் வண்ணம் பல அரிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

தமிழ் மன்னர்கள் உருவாக்கிய பிரமாண்டமான கோவில்கள், கோபுரங்கள், அணைக்கட்டுகள், கலைப்படைப்புகள் ஏராளம்! ஏராளம்!!

மேலும், தமிழ் மொழி இலக்கியங்களுடன், பக்தி இலக்கிய வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றினார்கள். இவ்வாறாக, மன்னர்களின் ஊக்குவிப்புகளால், தமிழ் இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், பண்பாடுகள் என்பவற்றை எம்மவர்கள் படைத்தனர். இவை இன்னமும் நிலைத்த வண்ணமே உள்ளன.

எனவே எமக்கு வேண்டியவை அனைத்தையும் வழங்கிய எமது முன்னோர்களின் நாமம் நிலையானது. எல்லோரும் நிலைத்து மேலோங்க சாதனை புரிவீர்களாக!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

இன்றைய அன்றாட

# பிரச்சினைகளும் எதிர்கொள்ளலும்

லக்ஸ்மன்

எந்த அரசியல் கட்சியாலும் இன்னும் 10 வருடங்களுக்கு நாட்டின் ஆட்சியை அசைக்கமுடியாது. இந்த நாட்டை கொண்டு நடத்தக்கூடிய சக்தி, மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்திற்கே உள்ளது என்றுதான் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதற்கு அடுத்த தேர்தலின் போதுதான் மக்கள் பதிலை கொடுப்பார்கள்.

இது நாடு சார்ந்த பொதுப்பிரச்சினைதான் என்றாலும், இலங்கையின் பொதுவான பிரச்சினைகள் பற்றி நாம் கலந்துரையாடவேண்டிய தருணங்கள் பல இலங்கையின் வரலாற்றில் உருவாகியிருந்தாலும், இந்தத் தருணமும் அதற்காகத்தான் உருவாகியிருக்கிறது என்பதனை எல்லோரும் சிந்திக்கவேண்டும்.

அன்றாடம் வாழ்வாதாரம் முதல் கல்வி என நாட்டின் அனைத்துத் துறைகளிலும் மக்களுக்குப் பிரச்சினைகள் உருவாகிவிட்டன. உருவாகிய பிரச்சினைகளைச் சமாளிப்பதா நாட்டின் சமூகம், பொருளாதாரம், அரசியல் போன்ற பொதுப்பிரச்சினைகளுக்குள் மூக்கை நுழைப்பதா என்பது மக்களுக்கே தெரியாத நிலை தோன்றிவிட்டது.

நீண்டகாலமாக, நாட்டின் எதிர்காலத்துக்கு முக்கியமான துறையான அரசியல், மிகவும் மோசமானதாக இருக்கிறது. ஒரு நிரந்தரமான அரசியலமைப்பு இல்லாத நாடாக இலங்கை இருக்கிறதே என்று கவலை கொள்ளவே முடிகிறது. சிறந்த பொருளாதாரக் கொள்கை, சிறப்பான வெளியுறவுக் கொள்கை, கல்விக் கொள்கை என எதையும் வைத்திருக்காத நாடாகத்தான் இலங்கை இருக்கிறது. இதற்கு முதலில் இனங்களுக்கிடையில் ஒற்றுமையை உருவாக்கியாக வேண்டும்.

ஆனால், இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர், சிங்கள அதிகார வர்க்க ஆட்சியாளர்கள், 1948ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரஜா உரிமைச் சட்டத்தின் மூலமாக 10 இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்தார்கள். 1949 இல் வாக்குரிமைச் சட்டம் மூலமாக மலையகத் தமிழர்களின் அரசியல் அடிப்படை உரிமையான வாக்குரிமை பறிக்கப்பட்டது. 1964 சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலமாக மலையகத் தமிழர்கள் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படும் நிலை உருவாக்கப்பட்டது. 1956 தனிச்சிங்கள அரச கரும மொழிச்சட்டம், 1957 இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பாண்டா- செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டது.

1958 இல் தமிழ் மக்களுக்கு எதிராக இனவழிப்புகள், சொத்தழிப்புகள், கொள்ளையடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. கல்லோயா, அல்லை- கந்தளாய், சேருவில, மணலாறு போன்ற திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்பட்டன. 1972 இல் சிங்களத்தினை மாத்திரம் அரச கரும மொழியாகவும், பௌத்தத்தை அரச மதமாகவும் கொண்ட முதலாம் குடியரசு யாப்பு கொண்டு வரப்படுகிறது.

எத்தனையோ வரைபுகள் முயற்சிக்கப்பட்டன. ஆரம்பத்தில், தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட தமிழ் தேசிய மொழி, வடக்கு கிழக்கில் நிர்வாக மொழி தமிழ், நீதி பரிபாலன மொழி தமிழ், பல்கலைக்கழக அனுமதியில் தரப்புபடுத்தலை நிறுத்தல், வடக்கு -கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினைத் தவிர்த்தல், இனவிகிதாசார அடிப்படையில் தொழில் வாய்ப்புகளை வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் நிராகரிக்கப்பட்டன. இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக 1948 இல் இருந்து 30 ஆண்டுகளின் பின்னரும் நிராகரித்தது தான் வரலாறு.

அதன் பின்னரும், வட்ட மேசை மாநாடு, சர்வ கட்சி மாநாடு, மாவட்ட சபை முறை, திம்புப் பேச்சுவார்த்தை, மங்கள முனசிங்க ஆணைக்குழு, தீர்வுப்பொதி என எல்லாமே வெறும் முயற்சிகளாகவே இருக்கின்றன. நல்லாட்சி காலத்தில் அரசியலமைப்பு மாற்றம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி தொடரமுடியாததாக ஆகிப்போனது. 1979 இல் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்கக் கோரி இப்போதும் கையெழுத்துப் போராட்டத்தினை நடத்தவேண்டிய நிர்ப்பந்தத்தில் நாம் இருக்கிறோம். அதனை நீக்குவதற்கு இன்னமும்தான் அரசாங்கங்களுக்கு மனமில்லை.

1983 கறுப்பு ஜூலைக் கலவரத்தின் மூலமாகத் தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட வன்முறை இன அழிப்பாக மாறியது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர்; சொத்துகள் கொள்ளையிடப்பட்டன; அழிக்கப்பட்டன. தமிழர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாகத் துரத்தியடிக்கப்பட்டனர். வெலிக்கடை சிறைச்சாலையில் 52 தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலை அதிகாரிகளின் கண்காணிப்பு விலக்கப்பட்ட நிலையில் சிங்களக் கைகதிகளால் கொடுமையான முறையில் கொல்லப்பட்டனர்.

இதுவரையில் 20 திருத்தங்களைக் கண்டது நமது நாட்டின் அரசியலமைப்பு. இப்போதும் அரசியலமைப்பு மாற்றத்தினை நோக்கிச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதிலும் கூட பூரணம் எனும் முழுமை கிடைக்குமோ என்பது சந்தேகம்தான்.

இவ்வாறான நிலையிலும், இந்த நாட்டில் எந்தவிதமான இனப்பிரச்சினையும் இல்லை என்று வெளிப்படையாகச் சொல்கின்ற ஜனாதிபதியைக் கொண்டவர்கள் தான் நாம். இப்படியிருக்கையில், நாம் நமது நாடு குறித்து எவ்வாறெல்லாம் சிந்திக்க வேண்டும் என்பதுதான் கேள்வி. அதற்கு மக்கள் எழுச்சி ஒன்றே தீர்வாக இருக்கும்.

ஒரு பிரச்சினையை மறைப்பதற்கு இன்னுமொரு பிரச்சினை, அதையும் மறைப்பதற்குப் பல பிரச்சினைகள் என்பது போன்று, நமது நாட்டு மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு ‘அல்லோலகல்லோலம்’ படும் நிலை உருவாகிவிட்டது.

அப்பாவித் தமிழர்களை சித்திரவதை செய்து துன்புறுத்தி அல்லல்படுத்திய காலம் போய், இப்போது யுத்தம் நிறைவு பெற்றிருந்தாலும் நிம்மதியான சுதந்திரமான வாழ்க்கையை வாழ்வதற்கான சூழல் இல்லாமல் செய்யப்பட்டு இருக்கிறது.

நாட்டில் இதுவரை உருவான அரசாங்கங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைத்துவிடவேண்டும் என்ற இதய சுத்தியான மனதுடன் முயற்சித்திருந்தால், அவர்களுடைய பிரச்சினை தீர்ந்து, நாடு எப்போதோ மலர்ச்சி பெற்றதாக இருந்திருக்கும். பிரச்சினைகளை ஊதிப் பெருப்பித்து அதில் குளிர்காய்கின்றவர்களின் கைகளுக்குள் நாடு சிக்கித் தவிக்கின்ற நிலையே இப்போது ஏற்பட்டிருக்கிறது.

தமிழரின் ஆயுதப் போராட்டத்தை ஊக்குவித்தது யார் என்பது, இதுவரையில் தெரியாதவர்களாக நாட்டு மக்களை வைத்துக் கொண்டிருக்கின்ற அரசுக்கு கடிவாளம் கட்டுவது யார் என்பதுதான் தெரியவில்லை.

ஈழத்தமிழர் தரப்பினர் இடையிலான திம்புப் பேச்சுவார்த்தை, அரசின் விட்டுக் கொடுப்பு இல்லாததால் தோல்வியடைந்தது. பின்னர் பல பேச்சுகள் நடைபெற்று தீர்வு எட்டாத நிலையில், தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட வன்முறைகள் நடைபெற்றன. இப்போதும் தீர்வை வழங்காது, எத்தனையோ தலைமுறைகளை அழித்துவிட்ட இலங்கை நாட்டின் அரசு இன்னும் வருங்காலத்திலும் பல தலைமுறைகளின் எதிர்காலத்தினையும் சூனியமாக்குவதற்கு முயல்வதுதான் கவலையானது.

சிக்கல்களும் பிரச்சினைகளும் குழப்பங்களும் வாழ்க்கையில் சாதாரணமானவைகள்தான். என்றாலும், நிரந்தரமாகத் தொடரும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயலாத, அதனை மூடி மறைப்பதற்கு முயல்வதுதான் மோசமானதோர் ஒடுக்குமுறையும் அழிப்புமாகும் என்ற உண்மை எல்லோருக்கும் விளங்கியாக வேண்டும்.

இவற்றையெல்லாம் விடுத்து, தேர்தல் வாக்கெடுப்பு நேரங்களில் கொக்கரிப்பதும் மக்களைச் சூடேற்றி, அவர்களின் வாக்குகளை ஏமாற்றிப் பெற்றுக் கொள்வதும் நடைபெறுகின்றமையானது வெறும் அபத்தமானதாகும்.

கொடுமைகளையும் படுகொலைகளையும் துன்புறுத்தல்ளையும் சிறைவாசங்களையும் உறவுகளின் அழிவுகளையும் சொத்தழிப்புகளையும் கண்டு அனுபவித்த தமிழ்ச் சமூகத்தின் நிம்மதியான வாழ்க்கையை வழங்குவதற்கு விருப்பங்கொள்ளும் போதே, நமது நாட்டின் அமைதிக்கு ஆராதனை கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

வரி அதிகரிப்பு, விலைவாசி அதிகரிப்பு, எரிபொருள் விலை அதிகரிப்பு என நாட்டு மக்களைச் சுமையுடன் வைத்துக் கொண்டு, வீதிகளை நிர்மாணிப்பதும் எதிர்கால நோக்கென்ற பெயரில் திட்டங்களை வெளியிடுவதிலும் நாட்டில் சுபீட்சத்துக்கு வழி பிறக்குமா என்பதே மக்களின் இப்போதைய கேள்வியாக இருக்கிறது. நாட்டின் நலன் என்பது ஒவ்வொரு தனிப்பட்ட மக்களதும் நலனாகும் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருக்க முடியாது.

தேர்தல்களில் வெற்றி பெற்றதும் நாட்டு மக்களிடமிருந்து முழுவதையும் சுரண்டும் வகையில் விதிக்கப்படுகின்ற விலை அதிகரிப்பென்ற கொள்ளை, மற்றைய தேர்தல் வருகின்ற வேளைகளில் நிவாரணங்களாக அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற விலைக்குறைப்பானது, மக்களை ஏமாற்றும் ஒரு வித்தைதான். மாறி மாறி வருகின்ற அரசாங்கங்களும், ஜனாதிபதியும் முன்னையவர்கள் மீது குற்றம் சுமத்துவதும் பழிகளை அவர்கள் மீது போடுவதும் ஒரு சிறப்பான நாட்டுக்கான குணாதிசயமாக இருக்க முடியாது.

அந்த வகையில்தான் நாட்டிலிருக்கின்ற மக்களின் நலன்கள் சார்ந்து, அரசாங்கம் சிந்திக்காத நிலையில் அவை பற்றிச் சித்திப்பதையே ஒரு கலந்துரையாடலாக ஆரம்பித்து, ஒருமிக்கின்ற பெரும் எடுப்பான எழுச்சிகள் தேவைப்படுகின்றன.

அந்தவகையில்தான் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதற்கான ஒருமிப்பினை நேர்மையுடனும், ஒற்றுமையுடனும் அனைத்து அரசியல் தரப்புகளும் மேற்கொள்ளவேண்டும் என்று கோசம் எளத் தொடங்கியிருக்கிறது. இது தேசியவாதம் என்பதும், இனவாதம் என்பதும் ஒருமிக்கின்ற நிலையை அல்லது, புள்ளியை நோக்கிய பயணத்தின் மூலமாக நாட்டினை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்ல வேண்டுமாக இருந்தால், ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்ற நிலைக்கு அப்பால் சென்று, ஒரு சிறப்பான அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

## கடிதங்கள்



### கற்பிட்டி மக்களின் போக்குவரத்து பிரச்சினை

கற்பிட்டியில் இருந்து அதிகாலை 3.30 மணிக்கு கொழும்பு நோக்கி புறப்படும் அரச பஸ், கடந்த சில வாரங்களாக நிறுத்திவைக்கப்பட்டு உள்ளதால் பிரதேச மக்கள் சிரமத்தை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

கற்பிட்டியில் இருந்து புறப்படும் அரச பஸ் சேவை, பல குறைபாடுகளுடன் இயங்கிவந்த நிலையில், இந்தச் சேவை மூலம் அரச ஊழியர்கள், தனியார்துறை ஊழியர்கள், வைத்திய தேவைக்காக செல்லும் நோயாளிகள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் பயணம் செய்து வந்த நிலையில், இந்தப் பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் பயணிகள் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றார்கள்.

புத்தளம் சாலை பொறுப்பாளருடன் தொடர்புகொண்டு இந்த விடயம் தொடர்பாக வினவியபோது, பஸ் பழுதடைந்துள்ளதாகவும் மாற்றீடாக போடுவதற்கு பஸ் இல்லையென்று தெரிவித்ததாகவும், அதிக வருமானம் பெற்றுத்தரும் கற்பிட்டி - கொழும்பு பஸ் சேவையை மேற்கொண்டு செல்ல விருப்பம் இல்லாத தன்மையை பொறுப்பாளருடன் பேசியபோது உணரமுடிந்தகவும் அந்தச் சேவையை பயன்படுத்தும் பயணிகள் தெரிவித்தனர்.

இந்தப் பஸ் சேவையைத் தொடர்ந்து திறம்பட இயக்குவதற்கு ஏற்றவாறான அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்கு, பிரதேச மக்களின் நலனில் அக்கறை செலுத்தும் முக்கியஸ்தர்கள் முன்வர வேண்டும் எனக் கேட்டுகொள்ளப்படுகின்றது.

-எ.எம். றிசாத்

# வாழ்வாங்கு வாழ்ந்தோர்...

'எப்படியும் வாழலாம் என்போர் மத்தியில் இப்படித்தான் வாழவேண்டும்' என்று முன்மாதிரியாக வாழ்ந்தவர்களை, முன்னிறுத்தும் பகுதி இது: உங்கள் நினைவுகளை இங்கே பகிர்ந்து கொள்ளலாம். அனுப்புங்கள்: news@tamilmirror.lk

## 'கனெக்ஸ்' மறைவு



கனடா, மொன்றியல் ஈழத் தமிழர் ஒன்றியத் தலைவராகவும் பண்பாட்டுத் தமிழுறவு மன்ற கியூபெக் அமைப்பாளராகவும் இருந்த எஸ்.பி. கனகசபாபதி (கவிஞர் கல்கிதாசன்) கனடாவில் காலமானார். அன்னாரின் மறைவு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறை, திருக்கோவிலை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், 90ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருக்கோவில் முருகன் கோவில் படம் பொறிக்கப்பட்ட கனேடிய முத்திரையை வெளியிட்டு, திருக்கோவில் பிரதேசத்தை உலகறிய செய்திருந்தார்.

இவரது தந்தை பூபாலபிள்ளை; தாய் சுந்தரம்மா ஆகியோராவர். கனகசபாபதி பூபாலபிள்ளை 1945-6-20இல் பிறந்தார். திருக்கோவில் மெதடிஸ்த மிசன் பாடசாலை, கல்லடி இராமகிருஷ்ணமிசன் சிவானந்த வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். எழுத்தாளரான இவர், 'எஸ். பி.செவ்வேள்', 'கதா கனெக்ஸ்', 'கல்கிதாசன்' ஆகிய புனைபெயர்களில் பல இலக்கியப் படைப்புகளைப் படைத்தார். தனது படைப்பாற்றலுக்காக சுவாமி விபுலானந்தர் நினைவு தங்கப் பதக்கத்தையும் புலமைப் பரிசில்களையும் பெற்றுக்கொண்டவர் ஆவார்.

திருஞானவாணி அறப்போர் அரியநாயகம், மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள், கல்கிதாசன் கவிதைகள், தேரோடும் திருக்கோவில் ஆகியன இவர் எழுதிய நூல்கள் ஆகும். கனடாவில் வெளிவந்த முதல் சஞ்சிகையான 'எழில்' சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றிய இவர், கூத்துக் கலையில் ஈடுபாடு கொண்டு, 'வில்விஜயன்' என்னும் வடமோடிக் கூத்தைக் கனடாவில் பழக்கி அரங்கேற்றியிருந்தார்.

ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம், ஜேர்மன், பிரஞ்சு ஆகிய மொழிகளில் புலமை உடைய இவர், அமெரிக்க *National Library of poetry* இன் வெளியீடான *The Path Not Taken* என்ற ஆங்கிலக் கவிதை நூலில், *Singing Dream* என்ற கவிதையை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கனடா, மொன்றியல் ஈழத் தமிழர் ஒன்றியத் தலைவராகவும் பண்பாட்டுத் தமிழுறவு மன்ற கியூபெக் அமைப்பாளராகவும் இன்னும் பல அமைப்புகளிலும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார்.

இந்நிலையில், இவரது மறைவு, தமிழ்கூறும் நல்லுலகுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

திருக்கோவில் எஸ். கார்த்திகேசு

## ஒரு சரித்திரமாக....



தெய்வத்திரு
எஸ். பாலசுப்பிரமணியம்

சிலரை ஏன் சந்தித்தோம் என எண்ணுவதுண்டு. ஆனால், ஒரு சிலரை மட்டும் ஏன் இவ்வளவு தாமதமாய் சந்திக்க நேர்ந்தது என யோசிப்பதுண்டு. இப்படி மலையகத்தின் மாணவர்கள் பலர் ஏக்கத்துடன் நினைவுகூரும் ஓர் ஆசான் தெய்வத்திரு சுந்தரம்பிள்ளை பாலசுப்ரமணியம் ஆவார்.

இவரால் பட்டை தீட்டப்பட்ட பலர், இன்று கல்விமான்களாக அரச, தனியார் துறைகளில் சிறந்து விளங்குகின்றார்கள். பாலசுப்ரமணியம் ஐயாவால் மலையக கல்வித்துறைக்கு ஆற்றப்பட்ட சேவை அளப்பரியது.

பாலசுப்பிரமணியம் ஐயா, மலையக மண்ணுக்கு பெருமை தேடித்தரும் மாணவர்களை உருவாக்குவதற்கு தமது அயராத உழைப்பை வழங்கியுள்ளார். அவர் எண்ணப்படியே, அவர் வழிகாட்டி உயர்த்திய மாணவர்கள், இன்று பல துறைகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றனர்.

பண்டாரவளை, அம்பிடிகந்த, தியகலயில் சுந்தரம்பிள்ளை-செல்லம்மாள் தம்பதியினருக்கு 1955 ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஒன்பதாம் திகதி பிறந்தார். அம்பிடிகந்த தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்ற இவர், உயர்கல்வியை பண்டாரவளை புனித ஜோசப் கல்லூரியிலும் கற்றார். பாடசாலையில் தனது திறமைகளை வெளிக்காட்டிய சிறந்த மாணவராத் திகழ்ந்தார். யாழ். பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலை பட்டம் பெற்று, மலையக மண்ணுக்குப் பெருமை சேர்த்தார்.

பாலசுப்பிரமணியம், தமது பட்டப்படிப்பை தொடரும் போதே, நண்பர்களுடன் இணைந்து மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவினார். ஒன்பது பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் பிறந்த இவர், குடும்பப் பொறுப்புகளை சுமந்து நிறைவேற்றியதுடன், தனது கடமைகளையும் செவ்வனே செய்து முடித்தார். வையாபுரி சரஸ்வதி என்பவரை மணம் முடித்து, இல்லற வாழ்க்கையையும் இனிதாகவே வாழ்ந்தார். தனது பாரியாரின் கல்விப் பணிக்கும் உறுதுணையாகவே செயற்பட்டார்.

பண்டாரவளை சென். தோமஸ் கல்லூரியில் இரண்டு வருட கால ஆசிரியர் பணியை மேற்கொண்டதுடன் 1982-1991இல் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக கடமையாற்றியுள்ளார். பின்னர், ஆசிரிய ஆலோசகராகவும் தமது பணியை முன்னெடுத்துச் சென்றுள்ளார்.

பாலசுப்ரமணியம் அவர்கள் ஊவா மாகாணத்தில் ஆசிரியர் சங்கக் கிளைகளை உருவாக்கியதோடு, அதனுடன் இணைந்து செயற்பட்டதில் பல வெற்றிகளையும் கண்டார். பதுளையில் கல்விமாணி கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டமை, ஆசிரிய ஆலோசகர் குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டமை, பதுளையில் வினாத்தாள் மதிப்பீட்டு நிலையம் ஆரம்பிக்கப்பட்டமை என அனைத்தும் நிகழ்ந்தது, இவர் உருவாக்கிய ஆசிரியர் சங்கங்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமையவே என்பது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற உறுப்பினரான அமரர் வேலாயுதத்தின் உதவியுடன் பசறையில் தமிழ் பிரிவுக்கான ஆசிரியர் மத்திய நிலையத்தை உருவாக்கியதோடு அதன் முகாமையாளராகவும் பொறுப்பேற்றுச் செயற்பட்டார்.

"நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்; ஆனால், இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்" என்ற ஏ.பி. ஜே அப்துல் கலாமின் அமுத வாக்குக்கிணங்க வாழ்ந்து காட்டியவர் எமது தெய்வத்திரு எஸ். பாலசுப்ரமணியம் ஐயா அவர்கள்.

கல்விமாணி கற்கைநெறியின் சிரேஷ்ட விரிவுரையாளராக, பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் இணைப்பாளராக இறுதிவரை செயற்பட்டு, ஊவா மாகாண தமிழ் கல்வி சமூகத்திற்கு அரும்பணியாற்றிய எம் ஆசான், 2019 ஜூலை மாதம் 20ஆம் திகதி எம் சமூகத்தை மீளாத்துயரில் விட்டுச் சென்றுவிட்டார்.

காலம் உள்ளவரை அவரது நாமம் எம்மவர் மத்தியில் ஒலித்துக்கொண்டே இருக்கும். அவரது அயராத அர்ப்பணிப்பு மிக்க சேவையை போற்றி, அவரின் வழிகாட்டலில் செதுக்கப்பட்ட சிலைகளாக நாங்கள் நிற்கின்றோம்.

(பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் கல்விமாணி கற்கைநெறி (2017/2020) ஆசிரியர் மாணவர்களும் கல்விசமூகமும் இணைந்து தெய்வத்திரு எஸ். பாலசுப்ரமணியம் ஐயாவுக்கு நினைவேந்தல் நிகழ்வை புதன்கிழமை (16) ஏற்பாடு செய்திருத்தமை குறிப்பிடத்தக்கது).

நடராஜா மலர்வேந்தன்

# எப்போது விடியும்?

## புறக்கணிக்கப்பட்ட உதயபுரி கிராமம்



அ. அச்சுதன்









திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை பிரிவுக்கு உட்பட்ட செல்வநாயகபுரம் கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள உதயபுரி கிராமம், அபிவிருத்தியில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட கிராமமாக காணப்படுகின்றது.

சுமார் 150 குடும்பங்கள் வாழ்ந்து வரும் இக்கிராமத்தில் சிக்கன கூட்டுறவு மகளிர் சங்கம், சிறப்பான முறையில் இயங்கி வருகின்றது. 2008ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம், உதயபுரி மக்களுக்கு ஒளி தரும் கலங்கரை விளக்கமாக காணப்படுகின்றது.

பெண்களின் சுயதொழில் முயற்சிகளுக்கு, கடன் அடிப்படையில் பணம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் பெண்கள், தையல் தொழில், ஆடு வளர்ப்பு, ஆடை வியாபாரம், சிறிய கடைகள் என தமது சொந்தக்காலில் நிற்பதற்கு வழி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தில், தற்போது சுமார் 40 பேர் உறுப்பினர்களாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த ஐந்து வருடங்களாக இப்பகுதியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து காணப்படுகின்றது. இதனால் குடும்பங்களுக்கு இடையே பிரச்சினைகள், குடும்ப சண்டைகள் ஏற்படுகின்றன. சில குடும்பங்களில் பெண்களே தலைமைத்துவத்தை ஏற்று நடத்துகின்றனர். இதனால், கூலி வேலைக்குச் சென்று, அவர்கள் தமது பிள்ளைகளை வளர்க்கின்றனர். இதற்கு காரணம் போதைக்கு அடிமையாகி, சில குடும்பத் தலைவர்கள் தமது பொறுப்புகள், கடமைகளை மறந்து தறுதலையாக மாறி வருகின்றமையாகும்.

இது இவ்வாறிருக்க, இப்பகுதியில் சுகாதார தொழிலாளர்களும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கூட, பிரதேச சபையோ நகர சபையோ மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. கடந்த கால யுத்தத்தால் இடம்பெயர்ந்து, மீள்குடியேறிய மக்களும் இப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குத் தேவையான வீடமைப்புத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் இன்னும் பூரணமாகப் பூர்த்தி செய்யப்படவில்லை என அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

சில இடங்களில், ஒரு காணிக்குள் இரண்டு, மூன்று குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்படியானவர்களுக்கு அரசாங்கத்தால் இதுவரை அரச காணிகள் கூட வழங்கப்படவில்லை. சுமார் 20 குடும்பங்களுக்கு, மலசலகூட வசதிகள் இல்லாமல் அவல வாழ்க்கை வாழ்கின்றனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களாவது, இவ் விடயத்தில் ஏன் கவனம் எடுக்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது. இந்தநிலையில், சுவிட்சர்லந்து பேர்ன் மாவட்டம் மேல் மருத்தூர் அருள் மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம், கல்வி சமூக நலம் பண்பாடு அறப்பணி மையத்தால், உதயபுரியில் வீடு அற்ற ஒரு குடும்பத்துக்கு வீடு கையளிக்கப்பட்டது. இப்பணி, திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் ச. திருச்செந்தூரன் தலைமையில் நடைபெற்றது.

மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் உதயபுரி மக்களுக்கு, திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை (உப்புவெளி) எடுத்த நடவடிக்கைகள் என்ன?



தையல் பயிற்சியை முடித்த பல பெண்கள், உதயபுரி கிராமத்தில் வாழ்கின்றனர். இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஒரு தொழில் பயிற்சி நிலையம் இப்பகுதியில் அமைக்கப்படுமானால், பொருளாதார ரீதியாக இவர்கள் உயர்வடைய வழி பிறக்கும் எனப் பயிற்சியை முடித்த பல பெண்கள் ஆதங்கம் தெரிவித்தனர்.

எனவே, இக் கிராமத்தின் அபிவிருத்தியிலும் பிரதேச சபை அக்கறை செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு கிராமத்தின் அபிவிருத்திக்கு வீதிகள் மிக முக்கியமானவை. ஆனால், உதயபுரி கிராம வீதிகள், மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. உதயபுரி அழகான ஒரு பகுதி. செங்குத்தான மலைப்பகுதியாக இக் கிராமம் காணப்படுகின்றது.

இங்குள்ள பாதைகள், மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத அளவு பாதிப்படைந்துள்ளன. சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை தினமும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். வீதி அபிவிருத்தி விடயமாக உதயபுரி கிராம அபிவிருத்தி சங்கம், பல தடவைகள் உரிய அரச அதிகாரிகளுக்கு அறிவித்தும் கடிதம் வழங்கியும், இது வரை முறையான அபிவிருத்தி திருத்த வேலைகள் செய்யப்பட வில்லை என சங்கத்தின் தலைவர் கே. கோணாமலை தெரிவித்தார்.

குறிப்பாக, மத்திய வீதி ஒழுங்கை, மத்திய வீதி 02 ம் ஒழுங்கை, உதயபுரி பிரதான வீதியின் ஒரு பகுதி, மத்திய வீதி ஒரு பகுதி, மத்திய வீதி 04 ஆவது வீதி ஒரு பகுதி, சிவன் வீதி, வள்ளுவர் அடை வீதி ஒரு பகுதி, சிவன் வீதி ஒழுங்கை, விநாயகர் அடைவிதி, ஆர்.டி.எஸ் கட்டட வீதி என்பன திருத்த வேலைகள் செய்ய வேண்டிய முக்கிய வீதிகளாகும்.

இங்குள்ள பல வீதிகளுக்கு வடிகான்கள் அமைக்கப்பட வில்லை. இதனால், மழை காலங்களில் பல வீடுகள் வெள்ளத்தால் பாதிப்படைகின்றன. குறிப்பாக, வீட்டு கழிவு நீர் கூட, மற்றவர்களின் வீடுகளுக்குச் செல்கின்றன. இதனால் பல்வேறு சுகாதார பிரச்சினைகளும் தலை தூக்குகின்றன..

ஒரு கிராமத்தின் அபிவிருத்திக்கு, இது போன்ற பல்வேறு பிரச்சினைகள் முதலில் தீர்க்கப்பட வேண்டும். அரச அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் எடுப்பார்களா என்ற ஆதங்கத்தில், மக்கள் வாழ்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. மக்களின் அடிப்படை பிரச்சினைகள் எப்போது தீர்க்கப்படும்? இவர்களின் அவல வாழ்க்கைக்கு எப்போது தீர்வு கிடைக்கும்? யார் பதில் தருவது? போன்ற கேள்விகளுடனேயே இப்பகுதி மக்களின் வாழ்க்கை, விடியலை எதிர்பார்த்துக் கழிகின்றது.

# ‘கிழக்கின் அவிழ்தம்’, ‘ஆயிரம் வேரும் அரும் மருந்தும்’ நூல்கள்

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தால் வெளியீடு செய்யப்பட்ட ‘கிழக்கின் அவிழ்தம்’ சஞ்சிகையையும் ‘ஆயிரம் வேரும் அரும் மருந்தும்’ நூலையும் வழங்கி வைக்கும் நிகழ்வு, கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தில் திங்கட்கிழமை (14) நடைபெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதன்போது, மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதரால் ‘கிழக்கின் அவிழ்தம்’, ‘ஆயிரம் வேரும் அரும் மருந்தும்’ ஆகிய நூல்கள், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரனுக்கு வழங்கப்பட்டது.

அத்துடன் நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் ‘சுவதாரணி’ பொதிகளும் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில், சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவின் வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ். சதீஸ், நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எஸ். நவந்திரராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(படங்களும் தகவலும்: பைஷல் இஸ்மாயில்)





# கலர் கண்காட்சி

நாத்தாண்டி, தும்மோதரை அஷ் ஷிபா பாலர் பாடசாலையின் கலர் கண்காட்சி நிகழ்வுகள் திங்கட்கிழமை (14) பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றன.

பாடசாலையின் தலைமை ஆசிரியை ரிப்கா ரிஷாத், உதவி ஆசிரியை நஸ்மா நாசிர் ஆகியோரின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில், இங்கு கல்வி பயிலும் 25 மாணவர்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு நிறங்களிலான பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

(படமும் தகவலும்: எம்.யூ.எம். சனூன்)











# மூதன்னையின் பாடல் கவிதை நூல்

புதன்கிழமை (16) பௌர்ணமி தினத்தன்று மாலை, யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையில் நடைபெற்ற சி. கிருஸ்ணப்பிரியனின் ‘மூதன்னையின் பாடல் கவிதை நூல்’ அறிமுக நிகழ்வின் காட்சிகள் இவை:

(படமும் தகவலும்: சபா தனுஜன்)















# கல்முனையில் ‘அந்தி மாலை நிலவு’



ஏ.எல்.எம். ஷினாஸ்

கல்முனை பிரதேச செயலகத்தின் நலநோம்பு அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ‘அந்திமாலை நிலவு’ ஒன்றுகூடல் செவ்வாய்க்கிழமை (15) மாலை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. எம்.ஏ. டக்ளஸூம் கௌரவ அதிதிகளாக கல்முனை மாநகர சபையில் மேயர் ஏ. எம். றகீப், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டனர். விசேட அதிதிகளாக பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கல்முனை வர்த்தக சங்கத்தினர் என பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கல்முனை மாநகரத்தின் பிரதான ‘கல்முனை வாசல்’ நாற்சந்தியில் இருந்து பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகளோடு அதிதிகள் பிரதேச செயலகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதையடுத்து, மாலை வேளை திறந்தவெளி மின்னொளி அரங்கில் நிகழ்வுகள் நடைபெற்றன. பிரதேச செயலகத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களுக்கும் ஓய்வு பெற்றவர்களுக்கும் நினைவுச்சின்னம் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், பிரதேச கலைஞர்களால் கலை கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. ஓவியக் கலைஞர் ஏ.சாக்கிர், பிரதம அதிதியின் உருவப் படத்தை நிகழ்வு நடைபெறும் போது, தனது கைவண்ணத்தால் வரைந்து கையளித்தார். மாவட்ட அரசாங்க அதிபரை கௌரவித்து கல்முனை வர்த்தக சங்கத்தினர், தங்க நாணய குற்றியை அன்பளிப்பாக வழங்கினார்கள். கல்முனை பிரதான சந்தை வர்த்தக சங்கத்தினர் அதிதிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.

நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் சிங்கள மொழியில் பாடலையும் மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன் தமிழ் திரைப்பட பாடலையும் பாடி நிகழ்வுக்கு அழகு சேர்த்தார்கள்.

பிரதம அதிதி, கௌரவ அதிகளுக்கு பிரதேச செயலக நலனோம்பு அமைப்பால் நினைவுச் சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. சேவை நலன் பாராட்டு உரையை பிரதேச செயலகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் எம்.எம். ஹசன் நிகழ்த்த, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஏ.எல்.எம்.ஷினாஸ் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார். நன்றியுரையை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எல். சிபாய நிகழ்த்த, இராப்போசனத்தோடு நிகழ்வுகள் நிறைவுபெற்றன.















# விழித்தெழு பெண்ணே

‘விழித்தெழு பெண்ணே’ - கனடா சர்வதேச மகளிர் அமைப்பால் சாதனைப் பெண்களை கௌரவிக்கும் நிகழ்வு, செவ்வாய்க்கிழமை (15) மட்டக்களப்பு வாடிவீட்டு விடுதியில் நடைபெற்றது.

‘விழித்தெழு பெண்ணே’ - கனடா சர்வதேச மகளிர் அமைப்பின் தலைவி திருமதி சசிகலா நரேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தனும் சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் திருமதி இந்திராவதி மோகனும் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

சம காலகட்டத்தில் சாதனைப் பெண்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த மருத்துவத் துறையில் சாதனை படைத்து 13 தங்கப் பதக்கங்களைப் பெற்று கிழக்கு மாகாணத்துக்குப் பெருமை சேர்த்த செல்வி த. தர்ஷிகா, பாகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் பங்குகொண்டு தங்கப்பதக்கம் வென்று விளையாட்டு துறையில் நாட்டுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்த மாங்குளத்தைச் சேர்ந்த கணேஷ் இந்துகாதேவி ஆகிய இருவரையும் பாராட்டி கௌரவிக்கும் வண்ணம் பொன்னாடை போர்த்தி, கனடிய நாட்டு அமைச்சர்களால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ்கள், பணப்பரிசில், நினைவுச்சின்னங்கள் என்பன வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட தகவல் அதிகாரி வ. ஜீவானந்தன், மட்டக்களப்பு மாவட்ட சாரணர் ஆணையாளர் வீ. பிரதீபன், தொழில் அதிபர் அண்ணாச்சி, விழித்தெழு பெண்ணே அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதிகள் உட்பட சாதனைப் பெண்களின் உறவினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

(கல்லடி நிருபர்)

















விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 19 பெப்ரவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.